3611

கௌர காவியம்.

VS No. 34. 1

m211,N28KN
N3 25.34
199148

3611

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

9 SEP 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ௵ செப்டம்பர் ௴ 1௳ [No. 34

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	661	6.	தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம்	669
2.	அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	663	7.	ஷெல்லி—கடல்—P. C. ஜயவேலு	671
3.	நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.,	664	8.	பொதிகைநிகண்டு (மரப்பெயர்த் தொகுதி)	672
4.	மாலைவிளி—ராவ்பகதூர் C. M. இராமசந்திரம் செட்டியார் B.A.,B.L.,	666	9.	சுவர்க்க நரகப் புணரியல் (William Blake) M. அனந்தநாராயணன், I. C. S.	673
5.	இறையனார் அகப்பொருள் (சில ஐயங்கள்) V. பரமசிவன்	669	10.	சொல்லூடாட்டம் - 7	676
			11.	வர்த்தமானம்	679

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 9.

ஒருமையும் பன்மையும் இனம்போன்றிருப்பினும் இனமல்லா இகல்கொண்டு ஊடாடுமொரு உலக மயக்கமே, குறிக்கோளாகி விளங்கவரு விருப்பம் என்பதொன்று மனிதரிற் பெரும்பாலோர்க்கு உருப்பெறு தொழிவதன் காரணமாகின்ற செய்தி இங்கு நாம் இதுகாறும் உரைத்திருப்பவைகளினின்று நன்கு புலப்பட்டிருக்கும் என நம்புகின்றேம். ஐயந்தான் இன்னும் யாதேனும் உளதேல் அவரவர் தம் நெஞ்சின் ஆழத்தை ஆராய்ந்து பார்த்துக்கொள்வதல்லால் உதவிக் கழைக்கவேண்டியது வேறொன்றுமில்லை. "நல்வாழ்வு வாழ்கின்றேன்" என்று வாயால் மட்டுமேயன்றி முழுமனதோடு இயம்பத்துணிபவர் இவ்வையகத்தில் இன்று யாரும் இலரென்று மறுத்துவிடல் இழுக்காமெனினும், அன்னோர் பத்துநூறாயிரத்திலொருவ ராவரோ என அயிர்ப்பதும் பேரெல்லையைப் போய் எட்டியபடியே என்பதில் ஐயமில்லை. மற்று, 'வாழாமற் கெட்டேன்' என்றென்றே ஏங்குகின்ற எண்ணிறந்த மக்களில் எவனே தான், "சுயராஜ்யம் இன்மையாற் கெட்டேன்; இன்ன சட்டம் இன்ன சீர்திருத்தம், இன்ன பொருளாதாய முறை இன்மையால் யான் கெட்டேன்; பண்டைய பழக்க வழக்கம் இதனால் கெட்டுவிட்டேன்" என்று, தன்னெஞ்சு அறிவது பொய்த்துப் பொய்த்துப் பயின்றிருந்தாலன்றிப் பேசத்தான் வாய்திறக்க வல்லவனாவான். "குறிக்கோ ளிலாது கெட்டேன்" என்ற திருநாவுக்கரசர் இம் மக்களையே தம் திருவுள்ளத்தில் வைத்து அவர் கதியைத் தம் மொழியால் தெரிவிக்கின்றார். இஃதிவ்வாறாக, நவசக்தியாசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், துறையூரில் நடந்த தமிழ்மாணவர் மகாநாட்டின்கண் தலைமை வகித்து நிகழ்த்திய கட்டுரையிற் கூறியுள சில மொழிகள் இங்குக் கருதற்குரியன:—

"உலகம் பலவிதம். ஒவ்வொரு விதமும் இயற்கைச் செந்நெறியில் இயக்குவது ஒழுங்கு. அவ்வியற்கை ஒழுங்கு நியதி எனப்படும். எது எது நியதியினின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பஞ் செய்ய இயற்கை விழையும் ஒன்று சீர்திருத்தமென்பது. இச் சீர்திருத்த மில்லையேல் உலகம் வளர்ச்சியுறாது. இயற்கையின் நோக்கம் உலகை வளர்த்துக்கொண்டு போவது. அவ்வளர்ச்சிக்குச் சீர்திருத்தம் இன்றியமையாதது.

தற்கால உலகம் பல துறைகளில் கேடுற்றுக் கிடக்கிறது. இதற்குச் சிறந்த காரணம் ஆட்சிமுறைகளில் அடிக்கடி நேரும் மாறுதல்களாகும். தற்கால அரசியல்உலகம் பெரிதும் மேல்நாட்டையே குருமூர்த்தமாகக் கொண்டிருக்கிறது! எல்லாவற்றிற்கும் இந்நாளில் மேல்நாடு தேவையாயிருக்கிறது! மேல்நாட்டு அரசியல் முறைகளுக்குத் தற்போது சோதனை ஜெர்மனியில் துவக்கப்பட்டிருக்கிறது. முடிவை உலகம் பேரவலோடு எதிர்நோக்கி நிற்கிறது. ஆட்சிமுறைகளில் நிலைத்த அமைதி நிலவின், பல துறைகள் செம்மையுறும். அதுவரை ஆங்காங்கே சீர்திருத்தக் கூக்குரல் எழுந்துகொண்டே யிருக்கும்.

பழைய தமிழர்கள் பெரிதும் இயற்கையோ டியைந்த இன்பவாழ்வு நடாத்தினார்கள். அதனால் இயற்கைவளர்ச்சிக்கு அவர்கள் வாழ்வு துணைநின்றது. பின்னே அவ்வாழ்வு குலைந்தமையான், இயற்கை வளர்ச்சி தடைப்படலாயிற்று. இயற்கைவளர்ச்சி தடைபடும் இடத்தில் பலதிறச் சிறுமைகள் உறுதல் இயல்பு.

பழந்தமிழ் நாட்டில் நிலப்பாகுபாடு இருந்ததேயன்றிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதிப்பாகுபாடு இருந்ததில்லை. மக்களுள் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது இடைநாளில் குடிபுகுந்த தொன்றே யாகும். இதற்கு 'இவர் காரணர் அவர் காரணர்' என்று சொல்வதால் என்ன பயன் விளையப்போகிறது? எவராலோ குறைபாடு நுழைந்துவிட்டது. அக்குறைபாட்டைப் போக்கமுயல்வது அறிவுடைமை. எவர் காரணரென்று போரிடுவது அறிவுடைமை யாகாது.

பிறப்புச் சாதியினின்றும் பெண்ணடிமை, தீண்டாமை முதலிய நச்சுக் குழவிகள் பிறந்தன. இச்சிறுமைகளைப் போக்க எழுந்த பேச்சுக்களும் எழுத்துக்களும் மலையெனவுங் கடலெனவுங் குவிந்தும் பரந்துங் கிடக்கின்றன. இவைகளைப்பற்றிப் பேசிப் பேசி என் நாவும் தழும்பேறி விட்டது;

எழுதி எழுதி என் கையும் மரத்துவிட்டது. இடைக்காலத்தில் தோன்றி இந்நாளில் பெருந்துன்பம் விளைத்துவரும் நோய்களை எப்படிப் போக்குவது? இவைகளைப் போக்கப் பல மருந்துகள் சொல்லப்படுகின்றன. சிறந்த மருந்து, கலப்பு மணமேயாம். இம்மணம் பரவப்பரவப் பெருகப் பெருக மக்களுக்குள் சகோதரநேயம் வளர்தற்கு இடமுண்டாகும்.

கலப்புமணத்துக்குப் பெண்ணுரிமை இன்றியமையாதது. பழந்தமிழர் காலத்தில் பெண்ணுரிமை இருந்தமையால் களவுமணம் நடைபெற்று வந்தது. காதல்மணம் கலப்புவழியில் நடைபெறத் தொடங்கிஞல் சாதிப்பேய் தானே ஓடும். அப்பேய் ஓடிஞல் பெண்ணடிமை எது? தீண்டாமை எது? எல்லாம் ஒழியும். இதற்கு எவர் விரைந்து முனைந்து வருதல் வேண்டும்? இளைஞர்கள் இளைஞர்கள் என்று சொல்ல வேண்டுவதில்லை.

தீண்டாமைக் கொடுமை எத்தகைத்து? தீண்டாமை கொண்ட நாடு பொலிவிழத்தல் திண்ணம். நமது நாடு பொலிவிழந்திருத்தல் கண்கூடு. எங்கெங்கே தீண்டாமை! அந்தோ! பொதுவிடங்களிலும் நீர்நிலைகளிலும் கோயிலிலுமா தீண்டாமை! என்ன கொடுமை! என்ன கொடுமை !!

* * *

இக்கட்டுரையில், "கெட்டோம்" என்ற பன்மை வழக்கிற்கு இவ்வளவும் ஒக்கும்போல் வெளிப்பார்வைக்கேனுந் தோன்றிஞலும், "கெட்டேன்" என்பதற்கிவைகளைக் காரணமாய்க் கூறுவதெல்லாம் உண்மையாகாமை உணர்தல் அருமையன்று. தீண்டாமை முதலிய தீமைகள் நுழைந்ததற்குக் காரணர் எவரென்று வினவுவதில் பயனில்லாமையை எடுத்துரைத்த நம் நண்பர் முதலியாரவர்கள், அவரவர் கேட்டிற்கு அவரவரே காரணராதலன்றி வேறு பேச்சிற்கு வழியில்லை என்பதை எடுத்துச்சொல்ல நினைத்திலர். இவ்விடயம்பற்றி யாம் 1928-வது ஆண்டில் வரைந்தவோர் தலையங்கத்தின் சில பகுதிகள் இங்கு நினைவிற் கொள்ளற்குரியன:—

இதுகாறும் தீண்டாமையைத் தொலைப்பதற்கென்று செய்துவந்த முயற்சிகளால் என்ன கைகூடி இருக்கின்றது என்று ஓரஞ்சாராமல் ஓர்வோமாயின் தீண்டாமை என்பது மனத்தொடர் பற்ற ஒரு வெறும் வெளிப்பழக்கமாக மாத்திரம் இருந்தது. இன்றைக்கோ அதனுடன் பகையோடுகூடிய பொருமையுஞ்சேர்ந்திருக்கக்காண்கின்றோம். கிணறுவெட்டப் பூதம் புறப்படுவது பழைய கதை. முன்னுள், ஒருவன் மற்றொருவனைப்பார்த்து, "விலகி நில்;" என்று சொல்லும் போது, இதனல் நிந்தனை நேர்ந்ததாக இருதிறத்தோறும் எண்ணியதில்லை. சாதி குல வேற்றுமைகளாலன்றி, ஒரு குடும்பத்தவர்க்குள்ளேயே தீண்டப்படாத சந்தர்ப்பங்கள் சில நேர்வதுண்டென்பதை யாவரும் அறிவர். நம்முள் சில முதியோர், பிறர் சமைத்த உணவைப் புசியார். நீராடி 'மடி' யாயிருப்பவர்மேல் குழந்தைகள் பட்டாலும் மறுபடி அவர் நீராடி வருதலுமுண்டு. இன்னவர் தம் ஏற்றத்தின் நினைவால் செருக்குற்று மற்றவரை நிந்தித்துத் தாழ்மை படுத்தவே இவ்வாறு செய்கின்றனர் என்று சொன்ஞலும் அது சிரிப்பிற்கிடமாம். இது அவர்கள் ஆசாரம், அவ்வளவே. சாதி வேற்றுமையால் ஏற்பட்ட உண்ணுமை, தீண்டாமை மணவாமை ஆதியாய ஆசாரங்களும், மனதைச் செலுத்தி வற்புறுத்தாமல், பண்டைநாள் பழக்கம் என்ற பான்மையில் நடைபெறுகின்றவரையில் நிந்தனை செருக்கு பகை எற்றம் இழிவு என்னு மின்னரோக்கங்களுக்கு இடந்தரா. ஆதலின், 'விலகி நில்' என்பது வார்த்தை அளவிலேயே நிந்தனை ஆகாது. நிந்தனையாவது மனதால் கருதப்படும் ஒரு நிலை. கரவுடைய நெஞ்சத்தராய், "அருகு வா" என்பதனிலும் தீயதோ, பழக்கமுறையில் "அகலப் போ" என்பது! திருதராட்டிரன் கட்டியணைத்த நெடுந்தூண் நொரிந்த விதமும் கதையும் மறத்தற்பாலன அல்ல.

உட்பகை இலதாயின், வெளிச்செயல் எவ்வகைத்தாயினும் ஒருபொருள் அன்று. நிந்தனை என்பது நினைவின் தன்மையாவது போன்றே சாதியில் தாழ்மையும் உயர்வும் நினைவேயன்றி நிலையன்று. 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று வழங்கிவரும் இத்தொடரில் செயப்பாட்டு வினைக்கு இடமே இல்லை. யாரை யார் தாழ்த்தி யிருக்கின்றனர்? யாரை யார் உயர்த்த முடியும். தொட்டும் தொடாமலும், உடன் சேர்ந்து உண்டும் உண்ணுமலுமா உயர்த்துவதும் தாழ்த்துவதும் உண்டாகின்றன? ஒன்றாய்ச் சேர்ந்து உண்பவரெல்லாம், பட்டுத்தொட்டுப் பழகுபவர்களெல்லாம், ஒருவரையொருவர் உயர்த்திக்கொண்டு வருகின்றார்களென்று எண்ண ஒண்ணுமோ!

உண்ணுததிலும் தீண்டாததிலும் நிந்தனையும் இல்லை, தீமையும் இல்லை, தாழ்வுமில்லை. சேர்ந்து உண்ணவேண்டும், அல்லது உண்ணப்படாது, தீண்டவேண்டும் அல்லது தீண்டப்படாது என்று காட்டுகின்ற பிடிவாதத்தில்தான் நிந்தனையும் தீமையும் தாழ்வும் எல்லாம்அடங்கியிருக்கின்றன. தீண்டாமையை விலக்குகின்ற இம்முயற்சி தலையெடுக்கின்ற வரையில் "இவர் அவரைத் தீண்டுவதில்லை" என்ற பழக்கம் மாத்திரம் இருந்ததே யல்லாமல், "நாம் உயர்ந்த சாதியார், அவர் தாழ்ந்த சாதியார், ஆகையால் அவரைத் தீண்டாமல் விலகிப்போ வென்று அவமானப் படுத்தித் தாழ்த்த வேண்டும்" என்ற எண்ணம் யாருக்கும் இருந்ததில்லை. அப்படித் தங்களை அவமானப்படுத்தித் தாழ்த்துகின்றார்களென்று தீண்டப் படாதவரும் மதித்ததும் இல்லை. இது சரதம். இப்பொழுது நடைபெறும் சீர்திருத்த முறைகளாலே இந்த எண்ணம் புதியதாகப் புகுத்தப்பட்டிருக்கின்றது. அதனல் பகை பரவி பிளவு அகன்று இருதிறத்தோர் மணப்பான்மையும் கெடுகின்றதன்றி வேறுயாது விளையக் கூடும். பகையைக் கிளப்பிவிட்டு, அதைப் போக்கச் சட்டங்கள் செய்கின்றோம் என்பார் சில உபகாரிகள். தீண்டாதவன் என்ற பழக்கத்திற்குப் பதிலாய் இப்பொழுது, தாழ்ந்தவன் அவன், என்ற செருக்குச் சிலர் மனதில் வளர்ந்து கெடுக்கின்றது. இத்திறத்தில் வளர்கின்ற செருக்கிற்கிணையாக அத்திறத்தில் பொருமையும் வளர்வதாகின்றது. தீண்டாத வகுப்பினரைத் தீண்டி உறவாடுபவனும், "நான் உயர்ந்தவன், அவர் தாழ்ந்தவர், இருப்பினும், அவர்களைத் தீண்டிவிட்டேன் பார், இனி அவர்களுக்கு என்ன குறை, இந்தப்படி நான் தாழ்ந்தவர்களை உயர்த்துகின்றேன்," என்று எண்ணலாகின்றுன். ஆம், ஆழ்ந்து பார்த்துச் சோதித்தால் அவன் எண்ணங்களின் சாரம் இதுவே யாகும். தம்மைத் தீண்டும்படி செய்துகொண்ட மறுசாதியோர், "பார்த்தாயா, நாம் தாழ்ந்தவர்களாயிருந்தும் கட்டுப்பாட்டினுலும் மற்றவித சாமர்த்தியங்களாலும் அவனைத் தீண்டும்படி செய்து செருக்கடக்கினேம். இந்தப்படி நாம் உயர்ந்தவர்களைத் தாழ்த்துகிறோம், உயர்ந்தவர்களைத் தாழ்த்துகின்றோம், உயர்ந்தவர்களைத் தாழ்த்துகின்றோம்" என்பதுவும் இவர் எண்ணங்களின் சாரமாகும்.

இங்கு நாம் கூறியவைகளால் தீண்டாமையையேனும் மற்றச் சாதிபேதங்களையேனும் எவ்வாற்றாலும் நிலைநிறுத்த வேண்டுமென்று நாம் வாதிக்கின்றோமென எண்ணவேண்டா. ஈச்வர சிருஷ்டியில் ஒருவன் தன்னைத் தீண்டப்படாதென்று நெஞ்சால் நினைத்து விலக்குதல் கண்ணேட்டமற்ற கயமை. அவ்வாறே, 'என்னைத் தீண்டாதே' என்னும் ஒருவனைப் போய்த் தீண்டத்தான் தீண்டுவேன் என்பதும் கண்ணேட்டமற்ற காரியமே. தீண்ட வருகின்றவர்களை விலக்காது அவர்களோடு உறவாடி மகிழ்விக்கும் உள்ளன்பு இத்திறத்தில் வேண்டும். தீண்ட வேண்டா என்பவனைத் தீண்டித் துன்புறுத்தாமல் அகல்கின்ற நல்லன்பு அத்திறத்திலும் வேண்டும். இவ்வகையில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர். இவ்வன்பும் ஈகையும் இல்லாக் காலையில், கட்டிப்புரண்டாலென்ன, மிச்சில்தான் புசித்தாலென்ன? கூட்டுறவு வாழ்க்கைக்கு உயிர்நிலையாகிய அன்பும் அருளும் ஒவ்வொருவர் மனத்திலும் நிலைத்திருக்கும் வகையை நாடாது, புறத்தே தோன்றும் சிலவற்றை நீக்கப் புகுவதால் ஏது பயன்! கூட்டிக் கூட்டிவைத்தால் கூடிவிடுவார்களென்று விவகரிப்பது, விளையாட்டுச் சிறுவர் தம் மரக்குதிரையை ஓட்டி ஓட்டிப் பார்த்தால் ஓடிவிடும் என்று எண்ணுவதைத்தானே ஒக்கும்!

தீண்டாமை, சாதிபேதம் முதலியவைகளில் தீமை உளவாயின் அத்தீமைகள், அன்னவைகளைச் சார்ந்து நிகழ்கின்ற மனதின்கண் இருப்பனவாதலால், அம்மனது அன்பு பெற்றுத் துளங்கத் துளங்க, அவை தாமே விலகும். விலக்க முயல்வது வீணுவதன்றி விபரீதமாக முடிவதுங் கூடும். ஆசாரத்திற்குமுன் ஆத்ம சுத்தியும், சிவபூஜைக்குமுன் சித்தசுத்தியும் இருப்பதன்றே முறை. "ஆத்ம சுத்தி லேனி ஆசார மதியேல, சித்த சுத்தி லேனி சிவபூஜ லேலரா" என்று வினவிய ஆந்திரப் புலவர் வரன்முறை தெரிந்து வினவினர்."

199148

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[652-வது பக்கத் தொடர்ச்சி]

(10) பரத்துவம்-இதன் எதிர்மறை அபரத்துவம் (11)

பரம் அபரம் என்னும் வியவகாரத்தின் அசாதாரண காரணங்கள் பரத்துவமும் அபரத்துவமுமாம். அவை, காலத்தாலும் திசையாலும் இருவகையன. பரத்துவம் என்பது முன்மை, அபரத்துவம் என்பது பின்மை. இவ்விரண்டு குணங்களும் திக்காலும் காலத்தாலு மாக்கப்படுவனவாதலால், இவ்விரண்டும் அநித்தியகுணங்களே. காலத்தின் கிரமத்திலுண்டாகும்விருத்தியின் அநித்தியத்தைக் காட்டுவதுபோலும், அவற்றின் முன்னராய் நிற்கும் நித்தியப் பொருளின் தன்மை. பின்வரும் அப்பர் பாசுரத்தைக் காண்க:—

காலமு நாள்க ளூழி படையாமு னேக
வுருவாகி மூவ ருருவில்
சாலவு மாகி மிக்க சமயங்க ளாறி
னுருவாகி நின்ற தழலோன்
ஞாலமு மேலை விண்ணொ டுலகேழு முண்டு
குறளாயோ ராலி னிலைமேல்
பாலனு மாய வர்க்கொர் பரமாய மூர்த்தி
யவனு நமக்கொர் சரணே.

தசபுராணம் - பண்-பழம்பஞ்சரம். 3.

திசையின் ஆக்கத்தைக் கீழ்வரும் சம்பந்தர் பாசுரத்தா லுணர்க:—

தேவ ரும்மம ரர்களுந் திசைகண் மேலுள தெய்வமும்
யாவ ரும்மறி யாததோ ரமைதி யாற்றழ லுருவினர்
மூவ ரும்மிவ ரென்னவு முதல்வ ரும்மிவ ரென்னவும்
மேவ ரும்பொரு ளாயினர் மேய துவிள நகரதே.

திருவிளநகர் - பண் - காந்தாரம். 6.

அண்மை சேய்மைகள் புத்தியால் அறியப்படுவன. காலசம்பந்தம்பற்றிய முன்மை பின்மைகளில் புத்தியின் சம்பந்தத்தால் பின்மைமுன்மையாகாலம். இதை அப்பர் விளக்குவதுபோல் தர்க்கநூல்கள் விளக்கியில.

(12) குருத்துவம். இது வீழ்தலின் அசமவாய காரணம் என்பர். இயற்கைத் தத்துவ நூலில் விவகரிக்கும் ஆக்ரோஷணசக்தியின் காரியமாகியஇதைப்பாரம்என்பர். இது திண்மை*யென்னுங் குணமாம். இது பஞ்சபூதங்களில், பிரதிவிக்கும் அப்புவிற்கும் மாத்திரம் உளதென்பர் தர்க்க நூலார். வாயுவுக்கும் உண்டென்பது இயற்கைத் தத்துவநூல் முடிவு. இன்றேல் நமது உலகத்திய வாயு, சந்திரமண்டலம் முதலிய ஏனைய கோளங்களுக்குச் சென்றுவிடும். இத்தன்மையாலே வாயு உலகத்தை மூடித் தாளெரு மண்டலமாய் நிற்கும் என்பது அறிவியல் சித்தாந்தம்.

குருத்துவம் வீழ்ச்சியால் அறியப்படும். அருவாகிய வாயுக்களுக்கும் வீழ்ச்சியுண்டு; ஆயினும் அவ்வீழ்ச்சி கண்ணுற் காணக்கூடாவிடினும் யந்திரங்களால் நிரூபிக்கக் கூடியதாம். கரிமல வாயுவும், பிராணவாயுவும் முறையே வாய்சிறுத்த இரண்டு கலங்களில் ரசாயன விதிப்படி உற்பத்திசெய்து, பிராணவாயு நிறைந்துள்ள வோர் கலத்தின் வாயைத் திறந்து கரிமலவாயு கலத்தின் வாயை அதன்மேல் வைத்து அதையும் திறந்து தலை கீழாய் அதை நிறுத்துவோமாயின் பிராணவாயு இருந்தகலம் கரிமல வாயுவாகவும், கரிமலவாயுவிருந்த பாத்திரம் பிராணவாயுவாகவும் நிறைந்து நிற்கும். இதைச் சாதாரண ரசாயன நூற்களிற் காணலாம்.

(13) திரவத்துவம்:—இதை நெகிழ்ச்சி யென்பர். இது முதல் ஒழுகுதலின் அசமவாயி காரணம். நிலம், நீர், நெருப்பு இம்மூன்றினுக்கும் குணமாகும். நீரில் இயற்கையாயும், நிலந் தீயானவற்றுள் ஒன்றன் சையோகத்தால் மற்றொன்றும் நைமித்திகமாய்த் திரவத்துவம் உளதாம். (உ-ம்) அரக்கு, மெழுகு நெய் முதலியனவற்றுள் ஒழுகும் தன்மை; இத்தன்மை நயப்பைத் தருவதாகும். இதனல்*பயன்படப் பல செய்யலாம். இக்கருத்தை உருவகப்படுத்தி அப்பர்,

உருகி யூன்குழைந் தேத்தி யெழுமின்நீர்
கரிய கண்டன் கழலடி தன்னையே
குரவ னஞ்செழுங் கோயில் குரக்குக்கா
இரவு மெல்லியு மேத்தித் தொழுமினே

திருக்குரக்குக்கா - திருக்குறுந்தொகை 9.

என்பர். மற்றும்,

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னைப்
பேணியவந் தணர்க்குமறைப் பொருளைப் பின்
முருகு விரிகுழுமலர்மே லயற்கும் மாற்கும் [னும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னுனே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் 4.

என்று பாடுவது காண்க.

(14) சிநேகம். இது கிரட்டுதலினேது. இது நீரின் குணம். வேறுபூதங்களில் இக்குணமின்றும். இதற்குக் காரணமானது அதன் திரவத்துவகுணமே; குருத்துவ

* தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி யத்திசைக்கோர் தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையு ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
விரதங்க ளுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்றவாறே.

நின்ற திருத்தாண்டகம் 2.

* உருகிட வுவகைதந் துடலி னுள்ளால்
பருகிடும் அமுதனை பண்பினனே.

—சம்பந்தர்

உருகுவா ருள்ளத் தொண்சுடர் தனக்கென்று
மன்பரா மடியார்கள்
பருகு மாரமுதென நின்று பரிவொடு
பத்திசெய் தெத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர் நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும்போய்
அவனருள் பெறலாமே.

—சம்பந்தர்

முதலிய குணங்கள்போல் பொருள்நிற்குந்துணையும் இதுவும் நிற்கும்.

திரட்டி ரைக்க வாந்திணிக் குஞ்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு மான்றனை
அருட் டிறத்தணி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழத் தீவினை தீருமே.

திருப்பழையாறை வடதளி - திருக்குறுந்தொகை 7.

அப்பின் பசையாலே எப்பொருளிலும் திரட்சி காணலாம்.

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் றன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் றன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் தன்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று [னைக்
கடுங்குரலா யிடிப்பானைக் கண்டேனோர் தெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருவாலவாய்த் திருத்தாண்டகம். 3.

சிநேகம் என்பது பற்று. ஈரமுள்ள நெஞ்சத்தின் தன்மையுமாம்:—

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ்
சேயிந்தப் பாரைமுற்றும்
சுற்றா யலைகடல் மூடினுங்
கண்டேன் புகல்நமக்கு
உற்றா னுமையவட் கன்பன்
திருப்பாதிரிப் புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி
னான்றன மொய்கழலே.

திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம்: 2.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[644-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 6-ம் தசகம்

6-ம் பாசுரம்.

தோற்றக் கடவை யில்லவை யுடையா
னவனொரு மூர்த்தியாய்
சீற்றத் தொடருள் பெற்றவ னடிக்கீழ்ப்
புகநின்ற செங்கண்மால்
நாற்றத் தோற்றச் சுவையொலி யுறலாகி
நின்றவெம் வானவ
ரேற்றை யேயன்றி மற்றொரு வரையா
னிலேனெழு மைக்குமே.

அவதாரிகை:—ஸ்ரீ கிருஷ்ணபகவான் தமக்குத் தோற்றிய பிரகாரத்தை ஆழ்வார் சென்றபாசுரத்தில் அருளிச்செய்தார். ஆனாலும் தாம் அந்தச் சாக்ஷாத்காரத்தை எப்படி அநுபவித்தாரென்று கூறவில்லை. அதை இங்கே உரைக்கின்றார்.

உரை:—சீற்றத்தோடு - தாம் நரசிம்மாவதார மூர்த்தியாய் ஹிரணியாக்ஷன் மார்பைப் பிளக்கும் வேளையிலும்; அருள் பெற்றவன் - பக்தனான பிரஹலாத ஆழ்வான்; அடிக்கீழ் புக நின்ற மூர்த்தியாய் - திருப்பாதங்களின் கீழ் அடக்கமாய் அஞ்சாமலும் கூசாமலும் தொழுது நிற்கவல்ல மூர்த்தியாய் - நரசிம்மாவதார விசிஷ்டனாய்; ("நின்ற" என்பது "மூர்த்தியைத்" தழுவியபடி) செங்கண்மால்-அப்போது புஷ்பித்தலர்ந்த செந்தாமரைப் புஷ்பம்போல் சிவந்த கண்களுள்ளவனும் - பக்தர்களிடத்தில் பிரீதி செய்பவனும் ஆகிய திருமால், வானவர் ஏற்றை - நித்தியஸூரிகளுக்குத் தலைவனை; கந்தம் ரூபம் சுவை சப்தம் ஸ்பரிசம், ஆகி நின்ற-ஆகியபஞ்சேந்திரியங்களுக்கும் பிரீதியைக் கொடுக்கிறவனை, அன்றி-விட்டு, யான் ஏழு பிறப்புக்கும் வேறே ஒருவனைப் பிராப்பியமாக அண்டமாட்டேன். ஏனெனில் தோற்றக் கேடவை-தோற்றம்-உண்டாகுகை - ஜந்மம், கேடு-நசித்தல், இல்லவன் - இல்லாதவன்; உடையான்-உடையவன்; ஜந்மம், நாசம்முதலிய தோஷங்களையுடைய வஸ்துக்களில் உள்ளிருந்து அவற்றை நடப்பிக்கிறவனாகிய, ஓர் மூர்த்தி - ஒரு விலக்ஷணமான தேவனாயிருக்கிறான் யான் ஆசரயிப்பவன்.

குறிப்பு:—இங்கு ஆழ்வார் நரசிங்க அவதாரத்தை எடுத்தது, சீற்றத்தோடு இருக்கையிலும் பக்தர்கள் பகவானை அணுகலாமென்று காட்டிக்கொடுக்கும் பொருட்டென்றறிக. இத்தசகம்முழுவதும் அவனது சுலபத்தையும் சௌசீல்யத்தையும் வற்புறுத்தி ஆச்ரிதரைத் தேற்றும்.

7-ம் பாசுரம்.

எழுமைக் குமெனதாவிக் கின்னமு
தத்தினை யெனதாருயிர்
கெழுமி யகதிச் சோதி யைமணி
வண்ணக் கூத்தனை
விழுமிய வமரர் முனிவர் விழுங்கும்
கன்னற் கனியினைத்
தொழுமின் றூய மனத்தரா யிறையு
நில்லா துயரங்களே.

அவதாரிகை:—ஆழ்வார் தம் மனோபாவத்தைப் பிரஸ்தாபமாய்க் கூறிய பின்னர், பரோபதேசத்தைப் பின்னையும் தொடங்கிக் கற்பிக்கிறார்.

உரை:—எற்றைக்கும் எனக்குப் பரமப்பிரிய வஸ்துவாய் என்னுடன் எப்போழ்தும் இடையீடின்றிக் கலந்து தன்னை அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கும் மஹாகுணத்தையுடையவனாய், விழுமியமரர் முனிகள் கன்னற் கட்டியாயிருந்துவைத் தெனக்குச் சுலபனாய் அதிமனோஹர திவ்விய சேஷ்டையுடைய எம்பெருமானை, உங்களுக்குக் கிட்டவொண்ணாதவன் அரியன் என்று கூசாதே தொழுங்கோள்; தொழவே உங்களுடைய எல்லாத்துக்கங்களும் போம்- என்கிறார்

8-ம் பாசுரம்.

துயர மேதரு துன்ப வின்ப
வினைக ளாயவை யல்லனா
யுயர நின்றதோர் சோதி யாயுல
கேழுமுண் டுமிழ்ந் தான்றன்னை
யயர வாங்கு நமன்ற மர்க்கரு
நஞ்சினை யச்சுதன் தன்னைத்
தயர தற்கு மகன் றன்னை யன்றி
மற்றிலேன் றஞ்ச மாகவே.

பதக் குறிப்புக்கள்:-ஜனங்களுக்குத் துக்கசுகஹேதுவான கர்மங்களாய், அதாவது புண்ணிய பாபங்களாய்; இக்கர்மங்கள் சிற்சில சுகரூபமாய்த் தோன்றினாலும் முடிவில் யாவும்துக்கத்துக்கே ஹேதுவாகும் நிமித்தம் "துயரமேதரும்" என்கிறார். அவையல்லனாய்-இப்பேர்ப்பட்ட கர்மங்களுக்குப் பகவான் வசியன் அல்லாதவனாய்; உயரநின்ற சோதியாய் - ஸர்வோந்நதமாயிருந்த விலக்ஷணசோதி ரூபமாய், அதாவது பிருகிருதிசம்பந்தம் ஒன்றுமில்லாத சுத்த ஸத்துவ தேஜஸ்உடையவனாய். உலகேழும் உண்டு உமிழ்ந்தான் தன்னை; அயர - அயர்ந்து போகும்படி-சேதனர்கள் மூர்ச்சை யடையும்படி, உயிர்களை வாங்கும் நமன் தமர்க்கு - யமபடர்களுக்கு, அருநஞ்சினை-நஞ்சுபோல் தரைப்படுத்தும் சுபாவனாய், அதாவது யமசேனைகள் பக்தர்களைப்பாதிக்காதபடி ரக்ஷித்தருளும் சுபாவனாய்; அச்சுதன் தன்னை-அழிவில்லாதவனை, தயரதற்கு மகன் தன்னை அன்றி-ஸ்ரீராமபிரானன்றி, மற்று - வேறு ஒன்றையும், தஞ்சமாக இலேன் - சரணமாக உடையேன் அல்லேன்.

குறிப்பு:—ஆனபின்பு, நீங்களும் எம்பெருமானை ஆச்ரயிங்கோள் என்று அருளிச்செய்கிறபடி.

9-ம் பாசுரம்.

தஞ்ச மாகிய தந்தை தாயொடு
தானுமாயவை யல்லனா
யெஞ்சலி லமரர் குலமுதல் மூவர்தம்
முள்ளு மாதியை
அஞ்சிநீ ருலகத் துள்ளீர்க ளவனிவ
னென்று கூழேன்மின்
நெஞ்சினால் நினைப்பான் யவனவ னாகு
நீள்கடல் வண்ணனே

அவதாரிகை:—முன்பாசுரத்தில் ஆழ்வார் தனக்கு ராமபிரான் ஒருவனே சரணம் என்றார். இராமபிரான் தற்கால மில்லையே? அப்பிரபுவை ஆழ்வார் தம் திருவுள்ளத்தாலே யோகமஹிமையால் சாக்ஷாத்கரிக்கக் கூடும். எங்கள் போலுள்ள உலகத்தார் அதற்குச் சக்தரல்லரே, அவர்கள், சென்றபாசுரத்தில் கூறியபடி, எவ்வண்ணம் மாட்சிமைபொருந்திய உயிராகின்றதோர் ஜோதியை அணுகுவது என்று ஆக்ஷேபிக்கக் கூடும். அதற்கு, நீங்கள் பொன்வெள்ளி முதலான உலோகங்களில் ஒரு ரூபத்தை அமைத்துத் திருப்பிரதிஷ்டை பண்ணி அவனது ரூபமாக நினைத்தீர்களாகில் அதையே பகவான் தனது வைகுண்டத்திலுள்ள திவ்விய ரூபசமமாக ஆக்கிக்கொள்ளுவா னென்கிறார்.

பதவுரை:—தஞ்சமாகிய - ரக்ஷகராயிருக்கிற; தந்தையாகித் தாயாகித் தானுமாய்-தான் தனக்கு நன்மை தேடுபவனுமாகி, அவையல்லனாய் - மேற் சொன்னவர்கள் அல்லாத பந்துவுமாகி, எஞ்சலில் - ஞானத்தில் யாதொரு குறைவுமில்லாத, அமரர் - தேவர்கள், குலமுதல் - கூட்டத்துக்கு நிர்வாஹகனாய்; மூவர் - பிரம்மா ருத்திரர் இந்திரர் இவர் மூவரும், உள்ளும் - சிந்தித்து வழிபடும், ஆதியை - ஆதிக் கடவுளை, உலகத்துள்ளீர் - லௌகிகர்களே, நீர் அஞ்சி - நீங்கள் கூச்சப்பட்டுப் பயந்து, இவன்-நீங்கள் திருப்பிருதிஷ்டை செய்தவர், அவனென்று - ஸ்ரீ வைகுண்டத் திலிருக்கும் அவன் அல்லவென்று, இழேன்மின் - ஸம்சயப்படாதீர்கள். நீள்கடல் வண்ணன் - மஹத்தான சமுத்திரம்போல் அளவில்லாத உன்னதசுபாவமுள்ளவன், யவன் - எந்த விக்கிரஹ உருவாக நெஞ்சினால் நினைப்பான்-உங்கள் மனஸாலே பிரதிஷ்டைக் காலத்தில் நிச்சயிக்கப் பட்டானோ, அவனாகும் - அந்த உருவே ஆவான். கூழ்ப்பு - ஸம்சயம்.

10-ம் பாசுரம்.

கடல்வண்ணன் கண்ணன் விண்ண வர்கரு
மாணிக்க மெனதாருயிர்
படவர வினணைக்கி டந்த பரஞ்சுடர்
பண்டு நூற்றுவ
ரடவ ரும்படை மங்க வைவர்கட்
காகிவெஞ் சமத்தன்றுதேர்
கடவிய பெருமான் கனைகழல் காண்ப
தென்றுகொல் கண்களே.

"அளவிடக்கூடாத மஹாத்மியத்தை யுடையவனை அயர்வறவமரர்களுக்கு இன்பமாய் நாகமாகிற ஆதிசேஷன் படுக்கையிலிருந்து கண்வளருகிறவன் வஸுதேவர்குமாரனாய் எனக்குப் பிராணனாய்த் துரியோதநாதிகள் சேனைகளுடன் மடியும்படி பாண்டவர்களுக்காகப் பாரதயுத்தத்தில் தேருக்குச் சாரதியாயிருந்த எம்பெருமானுடைய தொனிசெய்யும் மணிகள் பூண்ட திருவடிகளை என்னுடைய கண்கள் என்றுதான் காணப்போகிறதோ, என்கிறார்.

குறிப்பு:— மேல் 8-ம் பாசுரத்தில் ஸ்ரீ ராமாவதாரத்தை எடுத்துக் கூறியும் திருப்பதியடையாமல் தேர் ஓட்டும் கிருஷ்ணாவதாரச் சரித்திரம் ஆழ்வார் மனத்தில்தைக்க, அந்தத் தாழ்ச்சியையும்ஸௌலப்பியத்தையும் அநுபவித்து அந்த அவதாரத்தில் ஈடுபாடு உரைக்கலாயினர். பகவான் பக்தர்க்குத் தாழ்கின்றவர் என்பதல்லவோ இத்தசகத்தின் கோரிக்கை.

11-ம் பாசுரம்.

கண்கள் காண்டற் கரியனாய்க் கருத்துக்கு
நன்று மெளியனாய்
மண்கொள் ஞாலத் துயிர்க்கெல் லாமருள்
செய்யும் வானவ ரீசனைப்
பண்கொள் சோலை வழுதி நாடன்
குருகைக் கோன்சட கோபன்சொல்
பண்கொள் ளாயிரத் திப்பத் தால்பத்த
ராகக் கூடும் பயிலுமினே.

பதக்குறிப்பு:-பத்தராகக்கூடும்-'பக்தர்' பத்தரென்று திரிந்திருக்கிறது. - உயிர்க்கெல்லாம் அருள் செய்யும் எல்லா ஆத்மாக்களுக்கும் கிருபைசெய்யும் பகவான் அது எப்படி இயலும் எனில், அர்ச்சாரூபனாய் ஒவ்வொருவர் வீட்டிலும் பிரதிஷ்டை பண்ண அவ்விக்கிரகங்களில் அநுப்பிரவேசித்து ஸர்வ பலப் பிரதனாய் அவர்கள் பூஜையை வைகுண்டத்தில் நித்திய ஸூரிகளின் பூஜையை ஏற்றுக்கொள்வதுபோல் ஏற்றுக்கொள்வான் என்பது தாத்பரியம். பக்தராகக்கூடும் - ஸ்ரீ வைஷ்ணவர்களாகலாம். பயிலுமினே - அர்ச்சாவதாரச் சுவபாவனான பகவானைக் குறித்துப் பிரசங்கிக்கும் இத்திருவாய்மொழியைப் படித்து அறிந்துகொள்ளுங்கள். நன்று மெளியனாய் - தன் ஆச்ரிதரான நித்திய ஸூரிகளுக்குப்போல் மனுஷ்யர்களுக்கும் அருள் செய்வானாகையால் "எளியன்" என்றார். கருத்துக்கும் எளியன் - அதாவது சிந்தை செய்[illegible]

உதிப்பவன். ஆனல் "காண்டற்கு அரியன்"—பிரகிருதி சம்பந்த முள்ளவர்களுக்குக் கண்களால் காண்கை அரிது - ஆழ்வார்போன்ற யோகிகளுக்குக்கூடக் காண்கைக்கு அரிதெனக் கொள்க.

குறிப்பு:—இம்மூன்றும் பத்தில் ஆழ்வார்,தேவர்கள் மனுஷியர்கள் எல்லாரும் பக்திசெய்யவல்ல மூர்த்திமானயும், உடல்பொருந்திய திவ்விய மங்களவிக்கிரகமாகியும் உருவத்திலமைந்தவராகவும் கருத்தில் வைத்துப் பஜிக்கவேண்டுமென்று கற்பிக்கிருர். இந்தத்தசகத்தில் முதல் முதலில் தான் "செய்ய தாமரைக் கண்ணனைய்' தம் திருவுள்ளத்தில் பஜித்தாரேயாயினும் 5-ம் பாசுரத்தில் கிருஷ்ணவதார ரூபியாய்க் குறகிய முன்னுச்சி கேசவரிசைகள் தொங்கிக்கிடக்கக் கிரீடதாரியாய் ஸேவைகண்டேன், என்று சாற்றுகின்ருர். வைகுண்டத்தின்கண் வைகுண்டநாதனை நித்யசூரிகள் கனியாகவும் கன்னல் கட்டியாகவும் விழுங்குகின்ருர்களென்ருர். இதர தேவர்கள், பாற்கடலில் பள்ளிகொண்ட மூர்த்தியைக் கருத்தினுளமைத்துப் பூஜைசெய்கிருர்களென்ருர். யோகசாக்ஷாத்கார முள்ளவர்கள் ஸ்ரீராமவதார கிருஷ்ணவதாரங்களை எளிதில் அநுபவிக்கக்கூடு மென்றும் உரைத்தருளினர்.எல்லா மனிதர்களும் பகவானது திருவுருவத்தை அவரவர் இச்சைக்கேற்பப் பொன் வெள்ளி விக்ரஹங்களில் பிரதிஷ்டை செய்வாராகில், பகவான் ஸௌலப்பியத்தால் அவற்றையே தன்னுடைய திருமேனி யாக்கிக்கொள்ளுமென்று அருளிச்செய்தார். ஆகவே பகவான் எல்லாருக்கும் பூஜைக்காகத் தம் திருமேனியை அளித்து உதவுகின்ருரென்று சொல்கின்ருர்.

மாலை விளி

கூண்டுக் குருவியெனக் கோலத்தைக் கொண்டிருந்தோம்
வேண்டும் சுயேச்சை வெளிப்போந் தடைந்தனமே
மீண்டு மினிநாளை மீச்செல்லல் நாம்நினைக்கத்
தூண்டும் கடமையினைத் தூர்த்திடவும் எண்ணுவமே
தீண்டிச் செயும்வேலை தீச்செயலிற் சேர்ந்திருந்தும்
பூண்டு வினைகொள்வோம் பூர்த்தியுமாய்ச் செய்திடு
மாண்ட வுடல்தானு மாளா திருப்பதற்கே [ீவாம்;
ஊண்டனை ஈட்டற்கிங் குற்றனங்காணென்னம்மாய்! 1

பஞ்சாலை யுள்ளிடத்துப் பல்மாந்தர் கூட்டத்தே
எஞ்சாது வேலையினை யெல்லாமாய்ச் செய்தனமே
கொஞ்சாமல் பேசாமல் கோபமுமே கொள்ளாமல்.
கெஞ்சாத நெஞ்சுடனே கேலியையும் பார்க்காமல்
துஞ்சாமல் நாள்முழுதும் நம்வேலை தொலைத்திட்டு
நஞ்சாரும் வாயுடைய நந்தலைவர் சொற்கேட்டும்
நெஞ்சார நொந்தனமாய் நெஞ்சுள்ளே வைத்திட்டும்
அஞ்சாமல் வந்திட்டோ மானவுட னெந்தோழீ! 2

சூடான காலத்துஞ் சூடேறிக் கொண்டிருக்கும்
கோடானு கோடிக் குடிமக்கள் மூச்சினிலே
தேடாது போந்ததூஉம் தீக்காற்று முள்சேரும்
வாடாத பஞ்சின் வருந்தூசி மேலெழும்பும்
கூடாத துர்நாற்றம் கூடியங்கு முன்வீசும்
கேடான விப்பொருள்கள் கிட்டாம லகற்றிட்டோம்
வாடாத மெய்முனிபோ லாரணங்கே என்னம்மாய்; 3.

வந்திட்டோம் நம்மேனி வண்ணத்தைக் காண்போமேல்
தந்திட்ட வண்ணமெலாம் தாமெங்குப் போயிற்ரு
குந்திட்டு விரலிட்டுக் கோலமுமாய்க் கோதிட்டுப்
பந்திட்ட கார்மயிரின் பாங்கெல்லா மெங்கேயோ
சிந்திட்டுப் போயிற்றே சிந்தூரத்துப் பொட்டெல்லாம்
முந்திட்ட சேலையும் முந்தாணி தானெல்லாம்
இந்தநிலை நாமடைந்தோ மிங்கிருந்தே எந்தோழீ! 4.

நம்மேனி யின்னிலையை நாடிடினும் நற்பயனய்
அம்மோ முட்கிடந்த ஆலையினை நீங்கினமே
எம்மேனி யுருக்கியுனு மெமனுலகு விட்டினித்தான்
சும்மாநாம் மினிதேகிச் சுரருலகு காண்பதுபோல்
இம்மாயச் சிறைநீங்கி இன்னகமும் செல்வோமே
பெம்மானும் பெற்ருேரும் பேரின்பம் பெற்றிடவே
அம்மா வலைகிழிய அண்டையினில் விட்டோடும்
இம்மாயின் மீன்போலக் காணுவமே என்னம்மாய்! 5

பகலவன்போய் வெள்ளி மலைப்பாங்கர்ப் புக்கடைந்தான்
அகலமெலாம் செவ்வண்ணம் ஆழ்ந்தே அலங்கரிக்கும்
இகல்விக்கும் கார்மலைமேல் ஏற்றுளவாம் பல்லொளிகள்
ககனமதில் ஞாயிறுதான் காணுது போயிடினும்
சகலருமே இன்பமுறச் சார்ந்திடுவம் இன்னுமெனப்
புகல்வதுபோல் ஞாயிற்றின் பொன்கிரணம் தங்கியுறும்
தகைமையெலாம் நோக்கிடிலே தன்மமெலாம் இவ்வுலகில்
அகப்படலும் உண்டெனலாம் ஆருயிரின் எந்தோழீ! 6

களைத்தவனுப் வேளாளன் காடுழுதிப் பண்டங்கள்
இளைத்தவையை நீருட்ட ஈட்டுகிருன் வீட்டிற்கே
விளைத்தலிலாக் காட்டிடத்தே வீறெருவை யுண்டாக்க
வளைத்திடுவான் ஆட்டிடையன் வட்டத்தே ஆடுகளைத்
தளைத்தொழுவில் கட்டுண்ட தாய்ப்பசுவின் பாலினையே
மழைத்தாரை போல்கறக்க வந்திடுவான் ஆங்காங்கே
முளைத்துவரும் தாரகைகள் முன்தோன்ரு முன்னமுமே
துளைத்திருக்கும் தாழ்வீடு சேர்ந்திடுவம் என்னம்மாய் 7.

குருவி இனமினமாய்க் கூண்டுகளைத் தாம்தேடி
விரவிப் பறப்பதுவும் விண்ணிடத்தே காண்கிலையோ
சருகு தனைத்தைத்துச் சார்ந்துள்ள கூட்டகத்தே
மருவி அடைகிறதே மாலைவாய்ப் பறவையினம்
தெருவில் கிளரிடுங்கால் சேவலுடன் பெட்டையினை
உருவி யடைத்திடுவார் உட்குகையில் மாந்தருமே
வெருவி மரக்கிளைகள் வேர்த்தோடிச் சேர்ந்திடுமே
கருவண்ணக் காக்கையினம் காண்பாயேல் எந்தோழி

வாசல் பெருக்கிநீர் வார்த்துநறும் கோலமிட்டு
ஏசல் இலாவண்ணம் ஏற்றிடுவார் முற்றத்தை
காசும் இலாதரும் கண்ணுடி போல்மனையை
வீசிப் பெருக்கிடுவர் மீன்விளக்கங் கொன்றெரிப்பர்;
பேசில் புகழ்பெற்ற பேழைபோல் இல்லங்கள்
தூசு சிறிதின்றித் தூய்நெறியில் வைத்திடுவர்
மாசிலா நந்தம் மனைவாசல் போய்ச்சேரல்
தேசு புகழ்ஈசன் தெய்வஅருள் என்னம்மாய்! 9.

இனிதேதான் அடைந்தனமே இல்லம் தனைநாமே,
கனிதான் சுவைத்திடும்போல் காரியங்கள் எய்துவமே;
நனிதான் குழந்தைகளை நாடிமுகம் முத்தாடிப்
புனிதவாய் இன்மழலை பூத்துவரக் கேட்போமே
வனிதை கணவருமே வந்திருப்பர் அன்னவரின்
இனிய திருமுகங்கள் ஏறிட்டுக் காண்போமே
தனிமைச் சிறப்பெய்தத் தாள்வணங்கி ஈசனருள்
கனிய வரம்பெறுவோம் கார்க்குழலாய் எந்தோழீ! 10.

இறையனர் அகப்பொருள்

[சில ஐயங்கள்]

[649-வது பக்கத் தொடர்ச்சி]

(1) பாண்டிய நாடு அக்காலத் தமிழ்நாட்டிலே மிக விரிந்த நாடென்பதில் ஐயமின்று. ஆயிரக் கணக்கில் மக்கள் வாழ்தருமத் தேயத்திலே வற்கடஞ்சென்றதை வாய்ப்புறக் கூறினர். வற்கடத்தானே பசிமிகக் கடுக, மன்னன் ஒருசில புலவரைமட்டும் புரந்தரலாற்றேன் போதருமின் னெனப் புகல்வது என்னே? இது பொருந்திடு மாமோ? நாட்டின் எல்லோரையும் நயப்புறக் காக்கமாட்டானயின் மற்றவர்தமையும் மண்டுக பிறநா டென்றிலன் அன்ருே? மற்றம் மக்களைப் புரந்தரு மாற்றலன் நற்றவப் புலவர்தம் நலங்காப் பரிதோ? ஈதுணராது இங்ஙனமுரைத்தகோதில் அரசன் குறிப்புத்தான் என்னே? நாட்டிற் கணியாம் நல்லறிவோரை, கேட்டைஒழிக்கும் கேடில்புலவரை, எத்துயருறினும் ஏற்று உபசரித்தல் கற்ற நல்லரசன் கடனே யன்ருே? ஆகவே, மன்னன் புலவரை எங்கோ போகவிட்டது பொருந்தா தாகும்.

(2)கடைச்சங்கத்தின் காலத்திருந்த கவிப்புலவோர் யார்யாரெனத் தெளிதல் மிக்க அவசியமாகும். ஏனெனில், நாடுமலிய மழைபெய்தபின் அரசன் புலவர்எல்லோரையும் மீண்டும் அழைத்துவர ஆட்போக்கினன். நூல்வல்லாரைத் தேடச்சென்ற ஆட்கள் பொருளதிகாரம் வல்லார் எவருமிலரென்றும் எழுத்துஞ் சொல்லும் வல்லார்மட்டுமே கிட்டினரென்றுங் கூறினராம்! ஆகவே அக்காலத்துப் புலவர் யார்யாரென்பது தெரிவுறு மென்னில் அவர்தம் தகுதியை அறிதல் எளியதாம். இறையனர் அகப்பொருள், கடைச்சங்க வரலாற்றைப் பின்வருமாறு கூறும்:—

"இனி கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார். சிறு மேதாவியரும், சேந்தம் பூதனரும், அறிவுடையரனரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனரும், கணக்காயனர் மகனர் நக்கீரனருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட்டன, நெடுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபதுபரிபாடலும், கூற்றும் வரியும்,சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமாம். அவர் சங்கமிருந்துதமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற் றைம்பதிற்றி யாண்டென்ப."

கடைச்சங்க காலத்திலே சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மரும் பாடினோர்நானூற்றுவரும் சேர்ந்து நானூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்திருக்கின்றனர். இக்கடைச்சங்க காலத்திலே தமிழ்ச்சங்கத்தின் முக்கியமாய புலவர்களாகக் கருதப்பட்டோர், கபிலர், நக்கீரர், பரணர், மாங்குடி மருதனர் முதலியோ ராவர். இவர்தம் தமிழாற்றல் யாம் விரிக்கத் தக்கதன்று. அகத்திணை புறத்திணைப் பாக்கள் இவர்தம்மாற் பல யாக்கப்பட்டுள. குறிஞ்சிப்பாட்டைக் கபிலரும், நெடுநல்வாடையை நக்கீரனரும், மதுரைக்காஞ்சியை மாங்குடிமருதனரும் பாடியதன்றி, ஐங்குறுநூறு கலித்தொகை நற்றிணை குறுந்தொகை முதலிய அகத்திணை இலக்கியங்களில் இவர்களாற் பாடப்பட்டுள்ளமை மலையிலக்கு. அகப்புறஇலக்கணங்களிலே ஆழ்ந்தூன்றிய நுண்புலமுடையார்க்கே பெரும் நூல்கள் இயற்றுதற்கியலும். கபிலர், நக்கீரர், பரணர் முதலியோர் இலக்கண இலக்கியங்களில் ஆன்ற ஆற்றல் பெற்றிருந்தும், அரசன் பொருள் வல்லாரைக் கண்டிலேமென்று கவன்றதுதான் சரியோ? அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கணக் கடல்களைக் கரைகண்டார்க்குப் பொருளிலக்கணம் செய்தல் அருமையன்றென்று கூறல் எங்ஙனம் மிகையாகும். களவியலுக்கு உரைஎழுதும் ஆற்றல் பெற்றிருந்ததாகக் கூறப்படும் நக்கீரர் பொருளிலக்கணம் செய்யச் சக்தியற்றிருந்தா ரென்று கூறுவது அவரை இழிவுபடுத்துவதாகாதா? அன்றியும் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்களிற் பொருளிலக்கணம் விரிக்கப்பெற் றிருக்குங்கால், அரசன் வேறு பொருளிலக்கணங் கேட்ட தென்னே? தொல்காப்பியம் முதலியன சால்புடைவன வல்லவென்பது அவன் கருத்தா? இலக்கணமிரண்டிருப்ப அவை இல்லென்ற உணர்வோடு கவலும் அரசற்கு ஆலவாய் அழனிறக் கடவுள் அருள்செய்தா னென்பது உண்மையா? மறலியொடு மயலுறும் மன்னனைத் தெருட்டாது இறைவன் இருந்தமைக்குக் காரணம் என்னை?

மேலும் இவ் வகப்பொருள் இறைவனே இயற்றினனென்பதற்கு வலிய ஆதாரங்கள் எவை? பீடத்தின் கீழ் உடையாரின்றித் தனித்துக் கிடந்தமை ஒன்றே சான்றுபோலும்! வித்தகப் புலவர் வேறெவராதல் ஆங்கு இவ் வகப்பொருள் ஏட்டினை வைத்திருக்கலாகாதா? யாத்தவரை அறியாத காரணத்தான் இஃது இறைவனு லியற்றப்பட்டதெனக் கூறல் எவ்வாறு பொருந்தும்? இறைவனே இஃ தியற்றினனெனிற் பொருளதிகாரம் முழுவதும் செய்து கொடுத்திலாமை என்? அகப்பொருள் பொருளதிகாரத்தின் சிறு பகுதி தானே! இஃது முழுப்பொருளதிகாரம் ஆமா றெங்ஙனம்? ஞானத்திடை அரசன் கவல்கின்ருனென்று உட்கொண்ட இறைவன், ஞானம் முழுதையும் அடைதற்கு உரித்தான முழுப் பொருளதிகாரத்தையும் செய்யாமையின் நோக்கமென்? அவர்க்கிஃது அரிதென்ருே! நக்கீரர் முதலிய வித்தகப் புலவர் விளங்குகின்ற காலத்தே அவர்க்கு ஆற்றல் இல்லென்று இகழுறக் கடவுள் நூல் செய்திருப்பாரா? களவியலுக்கு உரைவேண்டிய மன்னனுக்குப் பெறுநெறி உணர்த்தியாங்குப் பொருணூல் பெறற்குந் தகுநெறி யொன்று காட்டி அமைவதல்லாது, வேண்டியதின் மிகக் குறைந்த பகுதியினைக் கடவுள் நேரே தாமல் பீடத்தின் கீழ் வைத்திருந்தாரென்று கூறுவது எவ்வாறு அறிவொக்கும் கூற்ருகும்? கவற்சிமிக்குப் பரிவுடன் நூல் வேண்டும் மன்னனது வீட்டிலோ அன்றி அவனுக்கு எதிராகவோ நூல் வருமாச்செய்யாமல் எங்கோ ஒரு மூலையில் இவ்வரியநூல் கிடத்தற்குக் காரண

மென்னை? அஃது அற்றைக்கு எத்தனை ஆண்டுகட்கு முன்பு அப்பீடத்தின்கீழ் வைக்கப்பெற்றதோ யாரறிவார்? நூலுக்கு உரைபெறு நெறி காட்டுவித்த அழனிறக் கடவுள்தானே அஃதியற்றியவனென எங்கானும் கூறினன் கொல்லோ? இவற்றை அறிஞர்கள் விளக்குவார்களாக.

(3) இனி, களவியலுக்கு நக்கீரர் உரைசெய்தது உண்மையா என்பது ஆராயக்கிடக்கின்றது

தமிழ்ச்சங்கத்தின் இறுதிக்காலம் மூன்றும் நூற்றுண்டாமெனக் கூறுப ஆராய்ச்சி வல்லுநர். எனவே நக்கீரர் கபிலர் முதலியோரது காலமும் 3-ம் நூற்றுண்டே யாதல்வேண்டும். அவ்வாறுயின், 7 அல்லது 8-ம் நூற்றுண்டில் வாழ்ந்ததாகக் கூறப்படும் மாறன் மீது பாடப்பட்ட கோவைச்செய்யுட்களை, 3-ம் நூற்றுண்டில் வாழ்ந்த நக்கீரர் எங்ஙனம் உதாரணமாகக் காட்ட இயலும்!

நக்கீரனுர்தாம் இக் களவியலுக்கு உரை செய்தாரென்றுல் தம்மைமட்டுங் கூறிக்கொண்டு மற்றப் பெரும் புலவர்களின் பெயரைக் கூறுது விடுத்ததெற்றுக்கு?

"கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் (உரை) உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்ச் சிலிர்ப்ப இருந்தான்" என்ற தொடரிலே நக்கீரர் தன்னைத்தானே இவ்வாறு கூறிக் கொள்வதற்கிடமுண்டா என்ற ஆசங்கை எழுதல் காண்க.

அஃதன்றி "உப்பூரிகிழார் மகனுவான் உருத்திரசன்மனுவான் செய்தது இந்நூற் குரை யென்பாருமுளர், அவர் செய்திலர். மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனுரால் உரைகண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்ட தென்க" என்ற தொடர்வாசகத்தைக் கவனிக்குங்கால் நக்கீரர் இவ்வாறு கூறியிருப்பாரா என்று கேட்டற்கு இடனுண்டாதல் அறிக. என்னை எனின், நக்கீரர் தாம் செய்த உரையே உண்மையாக வேருேர் உரையைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியமென்ன? நக்கீரனே இதற்கு உரைசெய்தால் வேறுசிலர் செய்ததாகக் கூறவேண்டிய அவசியந்தான் என்ன? அவருக்காக வேருெருவர் பரிந்து பேசுவது போலன்றே இவ்வாசகங்கள் இருக்கின்றன. நக்கீரர் தானே தன்னுரையை வரைந்துகொண்டுவரும்பொழுது நூலினுடைய ஆரம்பத்திலேயே "நான் செய்த இவ்வுரையை என்னுடையதல்லவென்றும் வேருெருவர்செய்ததென்றும் சிலர் கூறுவர். அஃதொவ்வாது" என்றபொருள் பொதுளக் கூறிச் செல்வாரா? மேலும் "என்ப" என்றசொல் எங்கும் பிரயோகிக்கப்பட்டிருப்பதனுனே இவ்வுரை நக்கீரருடையதன்றென்றுகூறி விடலாம். நக்கீரர் கடைச்சங்க காலத்தவரென்பதை யாவரும் அறிவார். கடைச்சங்க நிகழ்ச்சிபுட் பெரும்பாலன இவர்க்குத் தெரிந்திருக்கவேண்டும். இவரொடு சமகாலத்துப் புலவரது செய்திகளையும், இவராலும் இவரது காலத்துப் புலவர்களாலும் பாடப்பட்ட நூல்களையும் இவர் அறியாதிருக்க இடமில்லை யன்றே? யாரிடத்தோ கேட்டறிந்தவர்போல் "பாடினுரென்ப" "இருந்தாரென்ப" என்றுஎன்று கூறுகின்ற காரணத்தான் நக்கீரர் கூற்றாக இவைகளைக் கருதற்கிடனில்லை. நக்கீரன் தன்னைப் பற்றியே எவரிடத்தோ கேள்விப்பட்டதுபோல எழுதுதல்பொருந்துமா? இயற்கையா? இவைகளை யோசிக்கும்பொழுது இது வேருெரு புலவனுனே உரையெழுதப்பட்டதன்றி நக்கீரரால் எழுதப்பட்டதென்று கூற முடியாதென்பது விசதமாதல் காண்க.

நக்கீரர் வாழ்ந்த காலத்துச் சங்கம் முடிவுறவில்லையென்பதுண்மை. எனின் முடிவுவரை இருந்த புலவர்களையும் அரசர்களையும் சங்கமிருந்த ஆண்டையும் சொல்வதெவ்வாறு. சங்கமிருந்து பட்டபின் னிருந்த ஒரு புலவன் அவ்வரலாற்றைக் கேள்விப்பட்டு எழுதலாமன்றிச் சங்கம் முடிவதற்குள் முடிந்த நக்கீரர் முடிவுகட்டினுர் எனின் அஃது ஒவ்வுமாறெங்ஙன் ?

நக்கீரர் உரை நடந்துபோந்தவாற்றைக் கூறுகின்றுழி, "கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் தம்மகன் கீரங்கொற்றனுர்க் குரைத்தார். அவர் செல்வத்தாசிரியர்க் குரைத்தார். அவர் தேனுர்கிழார்க் குரைத்தார். அவர் தேனூர்க்கிழார்க் குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர்க் குரைத்தார்" என்றுங்குக் கூறிச் செல்லுகின்றுர். கடவுளானும் சங்கத்தானும் முறையே புகழ்ந்து வியக்கப்பெற்ற இவ்வுரையை நக்கீரனுர் வாய்ச்சொல்லாற் றமது மகனுர் முதலியோர்க்கு உரைத்துச் சேறலைக் காணுங்கால் எமக்கோர் ஐயப்பாடு மீண்டும் எழுகின்றது. தகவு மிக்க உரை ஈதே என்பது தெளிந்தபிற்றைச் சங்கத்தார் செயற்பாலது என்னெனின், இவ்வுரையைச் சிறப்பித்துப் புகழ்ந்தமைக் கறிகுறியாகச் சில அழியாத கவிகளாற் சிறப்புப்பாயிரம் கூறி இவ்வுரையை அக்கணமே நல்ல ஏட்டில் எழுதிவைத்திருக்க வேண்டுமன்றே? அஃதில்லாமல் இவர் நக்கீரர் வாயுரையாகவே உரைத்துப்போவதினின்று நக்கீரர் உரை கடைச்சங்க காலத்தில் உரையாகக் கொள்ளப்படவில்லையென் றேற்படுகின்றதல்லவா?

இன்ன பல ஆசங்கைகளின்று நக்கீரருக்கு வெகு நாட் பிற்பட்ட ஒருவராலேயே இதற்குரை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற கூற்று மெய்யாதல் காண்க.

(முற்றிற்று)

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

தமிழ்ப் பாடம் 34.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[647-வது பக்கத் தொடர்ச்சி]

சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்றுய் வழியான தெல்லாம்
கடந்தோமோ வென்றுர் கலுழ்ந்து. 61.

பதப்பிரிவு:—சந்தம் கழல் தாமரையும் சதங்கை அணி பை தளிரும் நோவ பதைத்து உருகி எம் தாய் வடம் தோய் களிற்றுய் வழி ஆனது எல்லாம் கடந்தோமோ என்றுர் கலுழ்ந்து.

பதவுரை.

சந்தம் - அழகிய
கழல் - வீரகண்டை யணிந்த [பாதங்களும்,
தாமரையும் - தாமரை மலர்போன்ற (மகனது)
சதங்கை - சலங்கையை
அணி - அணிந்த
பை - பசுமையான
தளிரும் - தளிர்போன்ற (மகளது) பாதங்களும்
நோவ - வலியெடுத்ததினுல் (அவ்விருமக்களும்)
பதைத்து - உடல் துடித்து
உருகி - மனங்கரைந்து;
கலுழ்ந்து - அழுது
"எம்தாய் - எங்கள் தாயே,
வடம் - கயிறு
தோய் - அழுந்திய (கழுத்தையுடைய)
களிற்றுய் - யானைகளையுடைய தந்தையே,
வழி - வழி
ஆனது - என்று சொல்லப்படுவது
எல்லாம் - முழுவதும்
கடந்தோமோ - கடந்துவிட்டோமோ"
என்றுர் - என்று கேட்டனர்.

விரிவுரை:—உற்றது இன்னதென்று செவ்வனே உணராத இச் சிறு மக்கள் தம் பெற்றேரைத் தொடர்ந்துசென்றபோது அம் மாநகரின்எல்லையைத் தாண்டுகின்றவரையில் நாற்புறமும் பார்த்துக்கொண்டு போயிருப்பார். யானையிலும் குதிரையிலும் தேரிலுமே இதுகாறும் உலவிவந்த இச்சிறு மக்கள் இன்றுநடப்பதெனும் புதுமையில் சிறிது ஊக்கம் முதலில் கொண்டிருப்பினும் இருக்கலாம். ஊரின் எல்லையைச் சேர்வதன்முன் அவர் கால்கள் சற்று நோவ ஆரம்பித்திருக்குமென்பதற்கும் ஐயமில்லை. காட்டினிற் புகுந்து சிறிது தூரம் போவதற்குள் காலின் வலி மிக, இந்த நடை இனிப் போதும் என அயர்ந்திருப்பார். ஆனுல், பெரியோருடன் ஏகும் பிள்ளைகள் ஒருபோதும் தமக்குக் கால் வலிக்கின்றதென்று சொல்லமாட்டார். இது சிறுவர் குணம். எனவே, மெல்ல மெல்லத் தம் தந்தையையும் தாயையும், "நாம் இப்பொழுது எங்குப் போகின்றேம்" என்று இடை இடையே வினவத் தலைப்பட்டிருப்பர். பெற்றேர் பரிவினேடும் அவர்களை, "குழந்தைகாள், உங்கள் கால் நோகின்றனவோ" எனக் கேட்டாலும் அவர்கள், "இல்லை இல்லை நெடுந்தூரம் நடக்க எம்மால் இயலுமே. போகின்ற இடம் எதுவென்று அறிந்துகொள்வதற்கே கேட்டோம், அவ்வளவே, வேறென்!" என மறுத்து மேல்நடப்பவராய், மீண்டும் மீண்டும் "எங்குப் போகின்றேம், அதைச் சொல்லுங்கள்" என வேண்டுவாராவர். இச்சிறுவர்க்குத் தாம் எங்குப் போவதாகச் சொல்வர் பாவம், நளனும் தமயந்தியும்? குறியேது. அடைகின்ற இடமென்று ஒன்று எங்குளது! ஆதலால், "மக்காள், நாம் இவ்வழியே போகின்றேம்" என்றுதான் அவர்களுக்கு, கேட்குந்தோறும் சொல்லிக்கொண்டுவந்திருப்பர். காலோவலிக்கின்றது, 'வழியே போகின்றேம்' என்றுலோ இவர்களுக்கு யாதும்விளங்கவில்லை. அடவியூடு இவர்நடக்கும் வழி முடிவதாகக் கண்ணிற்குத் தென்படும் இடத்தைச் சேர்ந்துவிட்டால் தம்பயணம் முடிந்ததென்றுதேறியிருப்பார். ஆனுல் முடிவதாக எண்ணிய இடத்தை அடைந்ததும் அவ்வழி இன்னும் முன்னேபோக, இவ்விரு மக்களும் ஆற்றுராகி இனி யோர் அடிபெயர்க்க இயலாமல் தாயையும் தந்தையையும் நோக்கி, "வழியே போகின்றேம், வழியே போகின்றேம், என்று காட்டிக்கொண்டு வந்தீர்களே, அந்த வழி எனப்படுவது முழுவதும் கடந்தொழிந்தோமோ, கூறுங்கள்" என உருக்கமாய் வினவி, அடக்கமாட்டாத் துயரால் அழுதும் விட்டனர் என்பதைப் புகழேந்தி இச்செய்யுளில் மிகவும் நயமாகக் கூறியுள்ளார்.

எந்தாய், என்பதை ஒரே சொல்லாக இங்கு எடுத்துக்கொண்டால், 'தந்தையே' என்று அழைப்பதாகப் பொருள்படும். அப்பொழுது, 'தந்தையே, வடம் தோய்ந்த கழுத்துடைய யானைகளுடையானே' என்று இம்மக்கள், நளனைமாத்திரம் அழைத்து, 'வழி ஆனது எல்லாம் கடந்தோமோ' எனக் கேட்டதாகும். எந்தாய், என்பதை, எம்+தாய் எனப் பிரித்தால் 'எங்கள் தாயே' என்று முதலில் தமயந்தியை அழைக்க அவள், இச்சிறுவர்படுந் துயரைக் காணச் சகியாளாகித் தரையைநோக்கி நிற்கவே, இம்மக்கள் பிறகு தம் தந்தையை வினவினுரென்று ஊகிப்பதற்கு இடமுளதாதலால் இப்பொருளே இயற்கைநய முடையது. "யானைகள் பல இருக்க இந்நாள் நாமிங்குக் கால்நடையாய்ப் போவதேனே" என்னும் நினைவால் நொந்தனர் இச்சிறுவர் என்பதும், "வடந்தோய் களிற்றுய்" என்றழைப்பதால் தெரிகின்றது.

தாயதன் மக்க ளுயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதும்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து. 62.

கருத்து:—ஒன்று மறியாப் பேதைகளான தன் மக்களது துயரத்தையும், இந்நிலைக்கு இவர்களைக்கொண்டு வந்த விதியின் கொடிய மாயத்தையும், எதுவரினும் செம்மையே செய்வதென்று துணிந்திருந்த நளன் நோக்கி, வருத்தத்தால் வாட்டமுற்று 'வழியானதெல்லாம் கடந்தோமோ' என்று கேட்ட மக்களுக்கு ஒன்றும் விடைசொல்லத் தெரியாமல் சித்திரத்தைப்போல நின்றுவிட்டான்.

இலக்கணம்.

ஒன்றன் பெயரை இதுவென்று கூறிக் குறிப்பதற்கு நிற்குஞ்சொல் பெயர்ச்சொல் என்பதை முன்னரே இவ்விதழ்களில்கூறி இருக்கின்றேம். வினைச்சொல்லைக்

றித் தெரிந்துகொள்ள வேண்டியவை பல இருப்பினும், பெரும்பான்மை முற்றுவினை எச்சவினை எனும் பாகுபாட்டையே நாம் முக்கியமாய்க் கற்றதுபோலவே, பெயர்ச்சொல் இலக்கணத்தில் முக்கியமாய் வேற்றுமையைப் பற்றிக் கற்போம்.

வேற்றுமை என்றால் வேறுபடுதல் அல்லது மாறுபடுவது என்பது அர்த்தம். சொல்லவருகின்ற விஷயத்திற் கேற்றபடி பெயர்ச்சொல் வேறுவேறு விதமாக மாறிப் பொருளைப் பேதப்படுத்த வேண்டுவது வாக்கியத்தின் அமைப்பிற்கு அவசியம். மரம், என்பது ஒரு பெயர்ச்சொல். மரம் வளரலாம், ஒருவன் மரத்தை வெட்டலாம், மரத்தால் பெட்டி செய்யலாம், மரத்திற்கு நீர் விடலாம், மரத்தினின்று பழம் உதிரலாம், மரத்தினுடைய கிளைகளைப் பற்றிக் கூறலாம், மரத்தில் பறவைகள் இருக்கலாம், மரமே என்று அதைப் பார்த்து அழைக்கலாம். ஆதலால் மரம் என்ற சொல், தானே வளர்கின்ற காரியத்தைச் செய்வதாயும், அழிக்கப்படுவதாயும், வேறொன்று செய்யப்படுவதற்குக் கருவியாயும், அதற்கு ஒன்று கொடுக்கப் பெறுவதாகவும், அதிலிருந்து ஒன்று நீங்குவதாயும், கிளைகளை உடைத்தாயிருப்பதாயும், அதனிடத்தில் ஒன்று இருப்பதாயும், கூப்பிடப் படுவதாயும், எட்டுவிதமாகப் பொருள் மாறி வருவதற்கு இயலும். இப்படி மாறிவரும்போது அது வேற்றுமை அடைகின்றதென்று சொல்வர்.

தமிழில் இருப்பன எட்டு வேற்றுமைகள். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம்வேற்றுமை என்று வரிசையாக அழைக்கப்படும். பின் தொடரிலக்கணமும் அதனிலிருந்து புணரிலக்கணமும் கற்பதற்கு இந்த எட்டு வேற்றுமைகளையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

முதல் வேற்றுமை:— தச்சன் பெட்டியைச் செய்தான் என்பதில் தச்சன் என்பது முதல்வேற்றுமையிலிருக்கின்றது. சாதாரணமாக வாக்கியத்தில் எழுவாயாயிருப்பனவெல்லாம் முதல்வேற்றுமைச் சொற்கள். ஒரு காரியத்தைச் செய்கின்றது இது வென்று குறிப்பது முதல்வேற்றுமையில் இருக்கும் சொற்கள் என்கிறவரையில் இப்பொழுது தெரிந்துகொண்டால் போதும். வடமொழியில் பிரதமாவிபக்தி என்று சொல்வதும், ஆங்கிலத்தில் Nominative case என்பதும் தமிழில் முதல்வேற்றுமைக்கு நேராகும். 'நாய் குலைத்ததால் சிறுவன் பயந்தான்,' என்றதில் குலைக்கின்ற காரியத்தைச் செய்கின்ற நாய், பயப்படுவதைச் செய்கின்ற சிறுவன், என்னும் சொற்கள் முதல் வேற்றுமையில் இருக்கின்றன.

இரண்டாம் வேற்றுமை-ஒரு காரியத்தைச் செய்யும் பொருளைக் காட்டுகின்ற பெயர்ச்சொற்கள் முதல் வேற்றுமை. இனி, செய்யப்படுகின்றது இதுவென்று காட்டினால் இரண்டாம் வேற்றுமை ஆகும். தச்சன் பெட்டியைச் செய்தான். செய்பவன் தச்சன் ஆகையால் அச்சொல் முதல் வேற்றுமை. செய்யப்படுவது பெட்டி ஆகையால்; பெட்டி என்பது இங்கு இரண்டாவது வேற்றுமையில் இருக்கின்றது. செய்பவனைக் காட்டுகின்ற முதல்வேற்றுமைச் சொற்கள் தம் உருவம் மாறாமல் அப்படியே நிற்கும். தச்சன் என்பது அப் பெயர்ச்சொல்லின் இயற்கை உருவம். காரியத்தைச் செய்பவன் தச்சனாக இருக்கும்போது, தச்சன் பெட்டியைச் செய்தான் என அப்படியே தச்சன் என்பது தச்சன் என்னும் உருவத்தோடேயே நிற்கும். ஆனால் செய்யப்படும் பொருள் பெட்டி. அது செய்யப்படும் பொருள் என்பதற்கு அடையாளமாக, பெட்டியை என்று மாறிவிடுகின்றது. ஐ என்று ஒரு எழுத்துச் சேர்வதால் பொருளிலும் உருவத்திலும் இந்த மாறுபாடு ஏற்படுகின்றது. இப்படி வேற்றுமைப் படுத்த வருகின்றவைகளுக்கு உருபு என்று பெயர்.

செய்யப்படும் பொருளைக் குறிக்கின்ற இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமாக வருகின்ற உருபு ஐ. மான் காட்டில் மேய்ந்தது, என்பதில் மேய்வதாகிய காரியத்தைச் செய்த மான் என்னும் பெயர்ச்சொல் முதல்வேற்றுமை, அது உருவம் மாறவில்லை. மாறவும் முடியாது. வேடன் மானைப் பிடித்தான், என்பது சொல்லவேண்டிய விஷயமானால், பிடிப்பதாகிய காரியம் செய்யப்படுவது மான் ஆதலால், அது ஐ என்னும் உருபுபெற்று மானை என்று இரண்டாம் வேற்றுமைக்கு மாறிவிடுகின்றது. 'வேடன் மான் பிடித்தான்,' என்று வைத்துக்கொள்வோம். அல்லது 'தச்சன் பெட்டி பண்ணினான்', என்று வைத்துக்கொள்வோம். இவ்விரண்டு உதாரணங்களிலும் மான், பெட்டி, என்பன ஐ என்னும் இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமான உருபைப் பெறுமற்போனாலும், பொருளை நோக்கினால் அவை இரண்டாம் வேற்றுமை. மான் (+ஐ) பெட்டி (+ஐ), என்று ஐ என்ற அடையாள உருபு தென்படாமல் மறைந்திருக்கின்றது. வேற்றுமை உருபு மறைந்திருந்தால் வேற்றுமைத் தொகை என்றும், தோன்றியிருந்தால் வேற்றுமை விரி என்றும் சொல்வர். வேடன் மானைப் பிடித்தான். தச்சன் பெட்டியைச் செய்தான். இவள் முகம் சந்திரனை ஒக்கும், என்றெல்லாம் வரும்போது, மானை பெட்டியை சந்திரனை என்னும் சொற்கள் இரண்டாம் வேற்றுமை விரி. வேடன் மான் பிடித்தான. தச்சன் பெட்டி செய்தான். இவள் முகம் சந்திரன் ஒக்கும் என வரும்போது இவை இரண்டாம் வேற்றுமையே. ஆனால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

இந்தச் செய்யுளில் 'செம்மை புரிவான்' என்று வந்திருக்கின்றது. புரிதல் என்றால் செய்தல் என்பது அர்த்தம். புரிவான், என்பது புரிகின்றவன் என்னும் பொருளில் வந்திருங்கின்றபடியால் வினையாலணையும் பெயர். புரிகின்றவன் இவன் என்று சொல்வதால் அது முதல்வேற்றுமை. இவனால் புரியப்படுவது செம்மை; ஆகையால் செம்மை என்னும்சொல் இங்கு இரண்டாம் வேற்றுமை. ஆனால் ஐ உருபு இல்லை. ஆகையால் அது இரண்டம் வேற்றுமைத் தொகை. செம்மை, என்பதில் கடைசி எழுத்தாகிய மை இல் உள்ள ஐ வேற்றுமை உருபன்று. கருமை பெருமை என்பனபோல செம்மை என்பதே பண்புப் பெயர். இதனுடன் இரண்டாம் வேற்றுமை உருபு சேருமானால் செம்மையை என்று ஆகும். ஆதலால் 'செம்மை புரிவான்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இது விரிந்து வருமானால் 'செம்மையைப் புரிவான்' என்று ஆகும். இவ்விதமே தலை, கை, என்பன ஐ என்று முடிந்தாலும் இரண்டாம் வேற்றுமை யல்ல. 'அவன் தலை பெரியது', 'அவன் கை நீண்டது', என்னும்போது தலை கை என்பன முதல் வேற்றுமையே. அவன் தலை ஆட்டினான்', 'அவள் கை நீட்டினாள்' என்றால், அச்சொற்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகை. விரிந்தால், "தலையை ஆட்டினான்" "கையை நீட்டினாள்" என வரும்.

ஷெல்லி

[552-வது பக்கத் தொடர்ச்சி]

கடல்

புயல்காற்றின் கொடுமை அதிகமாய் இருக்கிறது. கப்பலின் துகிற்கொடி துண்டுதுண்டாகக் கிழிந்திருக்கிறது. இத்துண்டுகள் கொடிய காற்றிலகப்பட்டு அப்புறமும் இப்புறமும் ஆடிநடுங்குகின்றன. இரவு இருள் நிரம்பியிருக்கிறது; அன்றியும் புகைசூழ்ந்து பரவியிருக்கிறது. இத்தகைய இரவில் மழை பெய்கிறது. மின்னல் ஆகாயத்திலிருந்து ஒருவெள்ளத்தைபோல்விடப்படுகிறது. கப்பலிலுள்ளோர், ஆகாயத்திலுள்ள நீர்பாயுந் துவாரங்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பதைப் பார்க்கின்றனர். தாரைகள் அடர்ந்துமரங்களின் அடிப்பாகங்களைப்போ லிருக்கின்றன. அவை கீழ்ப்புறமாக வளைந்து உள்ளன. ஆகாயமே சமுத்திரத்தில் இடிந்துவிழுகின்றாற்போலத்தோன்றுகிறது. பயங்கரமாய், அடர்ந்து நெருங்கிய மேகங்கள் தங்கள் தாங்கமாட்டாப் பாரத்தைத் தாங்கி யிருக்கின்றதைப் போலத் தோன்றுகின்றன. சமுத்திரம் அவைகளின் கீழ் அமிழ்ந்துவிட்டாற்போலத் தோன்றுகிறது. மேகங்கள் தங்கள் புதைபூமியாகிய சமுத்திரத்தில் போய் அமிழ்கின்றன. அப்பொழுது ஒரு பூகம்பத்தின் அதிர்ச்சியளவான சப்தம் உண்டாகிறது. அலைகளும், இடிகளும் நாலாபக்கத்திலும் நிச்சப்தமாய் விடுகின்றன. காற்றினது எதிரொலி இன்னும் சப்தித்துக்கொண்டிருக்கிறது. இப்போது இக்கப்பல் பெருங்காற்று வீசும் வழியில் அப்புறமும் இப்புறமும் மோதப்படுகிறது. இடி பொருந்திய மேகங்கள் மழை பொழிகின்ற எல்லைகளில் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து போகிறது. இப்போது காற்றால் கிழிக்கப்பட்ட அலைகள் வீசுகின்ற ஆழியின் பாதாளத்தில் இக்கப்பல் ஆழ்கின்றது. தண்ணீருள்ள ஒரு பள்ளத்தாக்கைப்போன்ற கடலின் மதிற்சுவர்களைப் போன்ற ஆழமான இடங்களிலுள்ள நிச்சப்தம் பயங்கரமாயிருக்கின்றது. சுழற் காற்றினால் மேற்கூறிய ஆழங்களிலுள்ள தண்ணீர் சிறிதும் சலனமடையாதிருக்கின்றது. கடலில், அழிவின் கண்ணாடிகள், அல்லது அழிவினது அறிகுறிகள் ஒளிர்ந்துகொண்டே தொங்குகின்றன. கடற்பாசி நக்ஷத்திரங்களின் ஒழுங்கீனமான கூட்டத்தைப் போலிருக்கின்றது. கடற்பாசி, சாவின் குறிகளாகிய அக்கினிஜ்வாலைகளின் ஓட்டத்தைப் போலும், இரும்பிலிருந்து ஒழுகுகின்ற தீயின் சுழல்களைப்போலும் இருக்கின்றது.

கருப்புநிறமான கப்பலைச் சுற்றிலும்கடற்பாசி, அழகுடனும், அச்சம் விளைவிக்கத்தக்க தன்மையுடனும் சூழ்ந்துகொள்ளுகின்றது. அக்கடற்பாசி பிரகாசம் மங்கிய தீ பொருந்திய சுரங்கத்திலிருந்து வீசி எறியப்பட்ட கனமான கந்தகஏடுகளைப்போலுமிருக்கின்றது. கடற்பாசி நந்தவனங்களில் கவினுறச் செய்வதற்காகக் கட்டப்பட்டுள்ள எந்திரவாவி, அல்லது நீராழியில் ஊற்றுப் போலெழும் நீரைப்போ லிருக்கின்றது. பல முறுக்குக்களாகக்கோபுரங்கள்போன்ற அலைகள்வெள்ளிய உப்புநீருடன் மின்னலின் வில்வளைவினோடு சிற்சில நேரங்களில் மிகவும் அழகாய் ஒளிர்கின்றன. இவ்வொளி கடலின் அடி அல்லது தரையிலிருந்து ஆகாயத்தையும் எட்டிப் பார்க்க எண்ணியதுபோலும்.

இப்பெரிய கப்பல் சிதறுண்டு போகிறது; ஒரு மரத்தைப்போல் இது பிளவுபடுகிறது. ஒரு பூகம்பம் ஒரு மரத்தின் ஆணிவேரை முறிப்பதுபோல், பெருங்காற்று இக்கப்பலை முறிக்கின்றது. சுழல்காற்று இம்மரத்தின் கிளைகளிலுள்ள இலைகளையும், சிறு கிளைகளையும் கீழே உலுக்கிக் கொட்டுகிறது. அதைப்போலப் புயல் காற்று இக்கப்பலின் பாய்மரங்களையும் கொடிமரங்களையும் கிழித்துக் கீழே தள்ளுகின்றது. ஆகாயத்திலிருந்து பொழிகின்ற கடுமையான இடிக் குண்டுகள் இக்கப்பலின் பாய்மரத்தைச்சின்னபின்னமாய்ச்சிதைக்கின்றது. இக்கப்பல், கருப்பாயும் கிழிந்தும் பிளவுபட்டும் நடுக்கடலில் நிற்கின்றது. இக்கப்பலிலுள்ள வெடிப்புக்கள் கடல்நீரை உள்ளே உறிஞ்சுகின்றன. இறந்துபோன, அதாவது உபயோகமற்ற கனமுள்ள மரக்கலம் அலைகள் எழும் கடலில் உயிரற்ற ஒரு ஜட பதார்த்தத்தைப்போல உருண்டு செல்லுகிறது. இம்மரக்கலம், இந்நிலையில், சுற்றிலுமுள்ள மண்ணினால் அணைக்கப்பட்ட ஒரு பிணத்தைப்போலிருக்கிறது. இம்மண் எவ்வாறு பிணத்தை அழிக்க முயலுகிறதோ, அவ்வாறே, கடலலைகள் இக்கப்பலைப் பூரணமாய் அழிக்க முயலுகின்றது. இதற்குள் பிடிப்பிலிருந்து கப்பலின் முன்பாகங்களில் ஒன்று அடியிலுள்ள தண்ணீரிலிருந்து மேலே வெடித்துக் கிளம்புகிறது. இது, குளிர்ந்த காற்று மேல் வீசும்போது, பாலைவனங்களிலுள்ள ஏரிகளின் மேலுள்ள பனிக்கட்டி எவ்வாறு துண்டுதுண்டாக உடைகிறதோ, அவ்வாறே உடைகிறது. இன்னொரு அடுக்கில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பிரயாணிகளும் மாலுமிகளும் தங்களில் ஒருவரையொருவர் தாமே புதைத்துக்கொண்டு கிடக்கின்றனர். ஒரு முற்றுகையில் ஏற்பட்ட ஒரு மதிற்சுவரிலுள்ள பிளவில் சண்டைசெய்யும்போது இறந்துபட்டவர்களைப்போலத் தண்ணீர் பெருவாரியாக மேலெழுந்தபோது, ஒரேதாய் வயிற்றில் சற்றேறக் குறைய ஒரே காலத்தில் பிறந்த இரண்டு புலிகள் பயத்தினால் மிகவும் துன்புற்று, தங்களைப் பிணித்துக்கட்டியுள்ள இரும்புச்சங்கிலிகளை துண்டுதுண்டாய்உடைத்துக்கொண்டு வெளிவந்தன. அப்போது அவைகளுக்குத் தைரிய மூட்டினது எதுவோ, அதுவே இப்போது அடக்கமூட்டுகிறது. அதாவது பெருவாரியாய் எழுந்த தண்ணீர் அப்போது, இவைகளுக்கு இரும்புச் சங்கிலிகளை உடைக்கப் போதுமான தைரியங்கொடுத்தது; வெளிவந்தவுடன் அதேதண்ணீர் இவைகளுக்குப் பயமும் அச்சமும் அடக்கமும் ஊட்டுகிறது. இப்புலிகள் ஒன்றின் பக்கத்தில் மற்றொன்று படுத்திருக்கிறது. ஒரு இயந்திரக் கைப்பிடியைப்போல் அவ்வளவு கெட்டியாக, அலைகளிலும் புயலிலும் காற்றின் கொடுமையிலும் ஆடுகின்ற மரப்பலகையினுள் இவ்விருபுலிகள் தங்கள் கூரிய வளைந்த நகங்களால் ஆழமாகப் பற்றுகின்றன. எல்லாம் இவைதானா?

ஒன்பது வாரங்களாக இந்நீண்ட கப்பல் தண்ணீர் நிறைந்த சமவெளி போன்ற கடலின் காற்றில்லாத பரந்த பிரதேசத்தில் கிடந்தது. அங்கே மரணத்தைப் பிரயோகிக்கின்ற சூரியன் முன்மாலையில் ஒரு சாயையும் எறியவில்லை. சந்திரகிரணங்களில் நீ இருந்

தாற்போலத் தோன்றிற்று. கடைசியாக, கரிய நிறங்கொண்ட மூடுபனியானது ஆழியின் ஆழத்திலிருந்து எழுந்து கப்பிக்கொண்டது. இம் மூடுபனியிலிருந்து வீசும்காற்று,சீக்கிரமாய்த்தொத்துவியாதிகளைப் பரப்பக்கூடியதா யிருந்தது. பிறகு குளிர்ந்த தன்மையான தூக்கம் நெல்மணிகள் அடர்ந்து பழுத்துள்ள விளைநிலத்தினூடே செல்லும் அழிவு அல்லது சொத்தையைப்போல் மெல்ல ஜனங்கள் நிறைந்த கப்பலினிடையே ஊர்ந்து வந்தது. அவர்களது நான்கு மஞ்சங்களையே சவப்பெட்டிகளாக்கி அவைகளில், தங்களது இறந்துபோன நண்பர்களின் உடலங்களை அடக்கஞ்செய்து, கடலின் அடியில் மாலுமிகள் எறிந்தனர்.

இந்த மாலுமிகளும் உயிரற்றவர்களாகத் தோன்றினர். மேற்கூறிய சவப்பெட்டிகளை வீசி எறிந்ததும், கடலலைகளும் தண்ணீரும் அப்பெட்டிகளைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு, அவைகளுக்கு மேலும் எழுந்தன; அதாவது அவைகளை விழுங்கின. மீன்கள் பிணங்களின்மேலணிந்துள்ள துணிகளை அவிழ்த்தன. உணவுக்கு யாதொன்றும் அகப்படாமல் பசித்திருந்த அம்மீன்களுக்குப் பிணங்கள் கிடைத்தது எவ்வாறு இருந்ததென்றால், யூதர்களுக்குக் கடவுள் தேவாமிர்தம் போன்ற மாரியை, உணவு அகப்படாத காட்டிற் பெய்ததுபோல் இருந்தது என்னலாம்.

பொதிகை நிகண்டு

[654-வது பக்கத் தொடர்ச்சி]

காளலாபூத் தும்பிபிறக் கொடிசுரையாங் கொற்று
  ணர்த்தையென்றுந் திரிபுரிசா றடைப்பேர்மஞ் சிகமே
தாளியின்பேர் புலிதுடக்கி யிண்டீகை யீங்கை
  தானிஞ்சி லாம்பகண்டை சிவிதைசிவே தையுமாம்
கோளுறுமா டாதோடை வாசையாம் விரலி
  கோடைகர மலரியிலாங் கலியேகார்த் திகைப்பூத்
தாளுறுகாந் துகந்தோன்றி கோடல்காந் தளின்பேர்
  சுருடஞ்சேம் புாகும்பா விரிபசிரிக் கடைவே. 168

அடகொடுசிக் குருவுமிலைக் கறியாகுஞ் சிலந்தி
  யமுதவல்லி சீந்திற்பேர் கமதாயந் தானே
அடருகில வாகைப்பேர் தாடிமமே சந்தஞ்
  சூட்டுசெத்திக் கொடியாகும் புட்டில்பீர் பீர்க்காம்
படலிகையு மாந்தூர்வை யிளம்புல்லே*சற்பம்
  பதம்விடா ரியுமறுகாஞ் சுருளிலைதாம் பூலங்
கொடிதிரையன் மெல்லிலைதின் னிலைாக வல்லி
  குறித்தபா னடைக்கொடியும் வெற்றிலைப் பேர்க்
  கியம்பே. 169

இயவையா டகம்யாம முதிரையொடு தோரை
  யேலமிவை துவரையாங் கடலைமஞ்சு ரமதாம்
பயறுழுந்து மாடமா முற்கமே பாசிப்
  பயறுசிறு பயறுகுந் தட்டையிதை கூலங்
கயவுறுகா ராமணியாங் குலத்தமே கொள்ளுக்
  காணமாஞ்†சிற்கடிமுற் கம்போகு சிம்பை
வியனவரை யாங்குரால் சில்லிசா கினியு
  மேகா தனுங்கீரைப் பேராங்கன் னிகையே. 170

கன்னிகாக் கணங்கிணி கருவிளையின் பேராங்
  கற்றாழை குமரிகன்னி மஞ்சியா ரலையு
மன்னுசச ரியுமாகு முருளரிசி கொற்ற
  மல்லியாஞ் சிவந்தசெவ்வனிபாலைப் பேராம்
சொன்னகுசை குசங்குமுதங் கூர்ச்சமுந்தெர்ப் பையதாம்
  சுண்டிலின்பேர் சமங்கைசுச்சாந் தொண்டை விம்பங்
  [கொவ்வை
யன்னகோ வையின்பேரா தூழில்கொடிக் கொற்று
  ழுயிடும்வச் சிரவல்லி பிரண்டையெனக் கழறே. 171

கழல்கழங்கு கச்சூர முழல்கழற்சி யாகுங்
  கணமுரிவேத் திரஞ்சாதி சூரல்பிரம் பாகுஞ்
செழிலசுணங் காயமிவை யுள்ளியின்பேர் சுரசஞ்
  சிறுகிழங்காங் கருணைகந்தஞ் சேனைகு ரணமாங்

தழைவரிவி ரீகிமணி மூக்கிபயிர் பைங்கூழ்
  சாலிபசும்‡புலிதொலியல் சொல்வைபத்து நெல்லாம்
வழுதுவைப லாலம்வைக்கோ லமுதுபடி யரிசி
  வளாரிதண் டுலமுமாந் தவிடுமுட்டை முடையே. 172

மூடுகுநொய்யே நொறுங்காகும் பதர்பதடி யாகு
  மூட்டுபொழி பொங்கழியுந் தூற்றுநெற் பொலியாம்
வடுவில்போர்க்$குவைசூடு சும்மையென மூன்று
  மலைநெல்லின் பேர்தோரை யைவனமாங் குளநெற்
கடுகுநீர் வாரமா மேனல்கம்பு கவலை
  கங்கிறடி தினையாகு மேனல்குரல் கதிரா
நடுமிருவி யருவிதினைத் தாளாகுஞ் சொன்ன
  னறுங்கிறுங்கு சோளமதாங் கோத்திரவம் வரகே. 173

வருத்து மெள்ளுக் குமிகைதில மெண்ணுவு நாற்பேர்
  மற்றதின்காய் கவையாம்வே யரிசிதோ ரையதாங்
குருத்தெருவை சூகரிவ ராகிசாய் முத்தங் [தியதாங்
  கோரைகொறுக் கையின்பேர்வாட் கோரைசெருந்
கரித்தகண்டல் முண்டகமே பூச்சிமுள்ளிப் பேராங்
  கல்லார நீர்க்குளிரி யாநெட்டி கிடைச்சு
பருத்தசடை கிடையாஞ்சை வலஞ்சடைச்சி நாரம்
  பாசியாங் காளாம்பி யாம்பியுமுண் டியுமே. 174.

முண்டகமம் போருகஞ்ச ரோருகஞ்ச ரோச
  முளரிமரை சலசங்கே கயம்பதுமம் விந்தம்
புண்டரிக நளினங்கோ கனகமா லுந்தி
  பூகிதிபங் கயம்வனச மம்புசம்வா ரீச
மிண்டைதிரு மனைகமல நாளிகன்னி கேந்திர
  மிறும்பிவிரிஞ் சம்பகற்பூச் சகசமர விந்த
மண்டுவிதி யகஞ்சதபத் திரிபுவனங் கஞ்ச
  மம்புயமுப்¶பானுலுந் தாமரைப்பே ரிறுமே. 175

இறும்பிரா சிலந்தளந்தா மரைப்பூவாம் பொகுட்டே
  யேற்றுருட்பூக் கன்னிகைபூங்கொட்டையதாமதின்காய்
மறிந்தவரா டகம்புட்ப ராகமதின் மணியாம்
  வளையந்தாள் கொடிநாள நாற்பேரா நீல
மறிந்தகுவ லயங்கோலங் கல்லாரம் பான
  லரத்தமிந்தீ வரங்குவளை காவிகழு நீராய்ப்
பெறும்பெயருற் பலமுமா நெய்தலல்லி யாம்பல்
  பெருங்குமுதங் கயிரவநாற் பேரெனப்பேர் தருமே.

தருவடவி நகஞ்சாகி குசஞ்சாதி சாலந்
  தாபரம்பா தவம்விருக்க மகலியமத் திரியே,

* கற்பம் (பி-ம்)
† சிக்கடிமுற் (பி-ம்)
‡ புலிசொல்லு வைமொன்பா னெல்லாம் (பி-ம்)
$ குவைசூர (பி-ம்)
¶ பானுறுக் (பி-ம்)

தருமம்பூ தரந்தாருப் பொதும்பர்பொங்கர் பதினேழ்
  சொல்லுமரப் பேர்பொழினந் தனவனமுய் யான
மரிதுடவை பூந்தோட்ட மரச்செறிவா ராம
  மடவியுத்தி யானம்வன முபவனந்தண் டலைகா
முருகிரண்டேழ் சோலைக்காஞ் சகுனமொடு கந்த
  மூலமிவை கிழங்காந்தூர் சடைசிவைவே ராமே.

வேருறுமங் குரம்பொடிப்பு நாறுகான் முளையாம்
  விடபங்கோடிபங்கொம்பு பணைசினைகோல் கொம்பர்
தாருவுடன் கவடுலவை களைபொங்கர் காம்பு
  தாழ்புறக்கஞ் சாய்கையுறுப் பிடபங்கோடரமே
வாருலவு தழைகப்புக் கொப்பின்பேர் நூழில்
  வள்ளியிரத் தியிலதை வல்லிகொடிப் போராஞ்
சேருமரி கலைகாழ்ப்பு கரிகாழா சினியுஞ்
  சேகுவயிரமதாகும் பொந்துபொள்ளல் பொய்யே.

பொய்யாத தலந்தகடு பன்னமடை யோலை
  புல்லுலவை சாய்கைசத னஞ்சதம் பலாச
மெய்யார்பத்திரந்தழைத மாலமிலைப் பேரா
  மென்கிசலை குழைகிளைவல் லரிமுறியே யலங்க
லெய்யாத மஞ்சரிபல் லவமும்பூந் தளிர்ப்பேர் [த்தலுமே
  இலிர்த்தல்சிலிர்த் தலுந்துளிர்த்தல் கிளைத்தல்குழை
கொய்யாது தளிர்த்தலின்பேர் வளன்பயினே முருந்து
  குருத்துமுதற் செறியாணி பிசினுமதன் முகிவே.

முகிழஞ்சா லகம்போகி னனைமொக்குண் மொட்டு
  முகிழ்கலிகை கோரகமே முகைமொந்தை யரும்பா
மகலுமலர் தாமமிணர் துணர்புட்பங் குசும
  மலர்போது சுமனசந்தார் வீயும்பூப் பொதுப்பேர்
தருகண்ணி துணர்தொத்து மஞ்சரிபூங் கொத்தாந்
  தாதுமக ரந்தங்கே சரங்கொங்கு மலர்த்தூண்
மகரமும்ப ராகமுமா மவிழ்தல்விள்ள னெகிழ்தன்
  மலர்தல்வெடித திடல்விரிதலுடைதலலர் தலுக்கே.

அலரினல்லி யகவிதழாம் புல்லிபுற விதழா
  மயர்பழம்பூத் தேம்பல்செம்மல் சாம்பலுமா மேடு
மலர்தகடு தோடுமடல் பூவிதழாம் பிஞ்சு
  வடுக்காய்தீ விளியுமாம் பலன்கனியே பழமாம்
பலனதின்றோல் செதிளாகுங் காழ்கொட்டை பீசம்
  பரல்விதைவித் தாங்குச்சம் படுச்சாறு தாறு

குலைகுடும்பு காய்க்கொத்தாம் பலனங்காய்த் ததுவாம்
  கொடுமபகே சிகைவடுகு பழிபலனி லாதே. 181.

பலிதமில்பூ வாக்காய்க்கு மரங்கோளி வானப்
  பத்தியமா முலர்ந்தமரம் வானமெனப் பேரா
முலமடவி யாரணியம் வனந்தாவம் புறவ
  முயர்தடகி கான்கடறு காந்தார மத்தம்
திலமுளரி சுரங்ககனம் பழுவம்விடர் காண்டந்
  தில்லங்கா னகம்வல்லை கானல்கடங் கானந் [களரி
தொலைவில்பொச்சை குறும்பொறைகண் டகங்கல்லி
  துருக்கமே கட்சிமுப்பா னெருபேர் காட் டினுக்கே ()

காட்டுநிறை தூறுகுன்மம் பஞ்சி செடிவிடபங்
  காணரியல் சிறுதூறும் பதுக்கையற விறலாம்
வீட்டுகுறுங் காடிறும்பாம் வல்லைபெருங் காடாம்
  விளையரண்கா வற்காடாம் முதையலுதிர் காடாம்
பூட்டதிக மிளங்காடாங் கரிகாடு பொச்சை
  பொதிசுரமும் பொரிகாடாம் பொச்சைவே லியின்பேர்
கூட்டகக்கா ழாண்புறக்காழ் பெண்ணுகும் வெளிறு
  கொடுவைலலி யாங்கடுக்கண் டகமிரண்டு முள்ளே. 183.

முளரியறல் $ சமிதையெரி துரும்புசுள்ளி ஞெகிழி
  முடுகுசிரா யிடுகுகட்டை யிந்தனமே காட்ட
முளர்முருடு விறகின்பே † ருரையதிங்கங் குளியம்
  யோகமூ லியுமருந்து மௌடதத்தின் பொதுப்பேர்
தளர்வறுசல் லியகரணி கருவியின்புண் ணுற்றல்
  சந்தான கரணிதுண்டம் பொருத்தலாம் விரணக்
களையொழித்தல் சம்மான கரணியதா மூர்ச்சை
  களைந்துயிர் குதலமுத மமுதசஞ்சீ வனியே. 184.

வனைதாம மலங்கல்சிக ழிகைகண்ணி யணியல்
  மாலிகைதார் மஞ்சரிகத் திகைபடலை மிலையல்
புனைகோதை சுக்கைவா சிகைதொங்க லொலியல்
  பூந்தெரியல் பிணையலிலம் பகந்துடரே சுருங்கல்
நினைவாகுந் தொடையிருபா னிரண்டுமொ லையின்பேர்
  நீடுமிலம் பகஞ்சூட்டு நுதலணியென் றுகுஞ்
* சினையாகும் வாசிகைப்பேர் படலைசிக ழிகையாஞ்
  செயம்பெற்றோ ரணிவதுதான்வாகைமா லிகையே.

$ சமிதையரி (பி-ம்)
† ருரையதகங் (பி-ம்)
* சினையாரும் (பி-ம்)

நாலாவது மரப்பெயர்த் தொகுதி முற்றும்.

சுவர்க்க நரகப் புணரியல்.

[WILLIAM BLAKE]

முன்னுரை.

சுவர்க்க நரகப் புணரியல் என்ற நூல் வில்லியம் ப்ளேக், (William Blake) என்ற ஆங்கிலக் கவிஞரால் இயற்றப்பட்டது. இதில் பதிந்துள்ள தத்வங்களில் சில, ஆத்மவிசாரணை செய்பவருக்கு, முதல் நோக்கில், விபரீதமாகவும் அஸுரவேதமொன்றின் பகுதியைப்போல் தீக்குணங்களைப் பலப்படுத்துதற்கேற்றவோர் அபாய சக்தியுள்ளனவாகவும் தோன்றலாம். இங்குக் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. ஸத்ய ஸ்வரூபத்தைப் பார்க்குங்கால், கண் கூசத்தான் கூசும். அதற்குப் பயந்து கண்ணை மூடிக்கொள்பவனுக்கு, ஆத்மவிசாரணை செய்ய யோக்யதையில்லை. மஹாவீரனும் ஆண்டகையுமாகிய அர்ஜுனனும் பகவானது விசுவரூபத்தின் ஜோதியால் மனமுடைந்து, "எனக்கு ஸகஜமும் பிரியமுமான தேர்ப்பாகன் வடிவத்தை மீண்டும் கொள்வாயாக" என்று கண்ணனைப் பிரார்த்தித்தான். இந்தச் சம்பவத்தின் இரகசியப் பொருள் யாதென்றால்,—ஸத்யமே தெய்வம், அந்த ரூபத்தை அஞ்சாது காண்பவன் ஞானி: பயப்படும் எவனையும் 'அதிகாரி' யென்று சொல்ல இடமில்லை என்பதாம். பகவானும், "தேவாதி தேவரும் என் ரூபத்தைக்காண ஏககாலத்தில் இலச்சையுற்று நடுங்குகின்றார்" என்று கூறவில்லையா?

ஆயினும் வில்லியம் ப்ளேக் இயற்றிய இச்சிறு நூலில் கூறப்பட்டதெல்லாம் உண்மையென்று எவரும் நம்பவேண்டா. எனினும் எந்தக் கொள்கையும் விசாரிக்கத் தகுதியுடையது. மனநிலை தடுமாறச்செய்தேனும் ஆத்மசக்திகளைக் கிளப்பக்கூடிய கொள்கையும்-ஸத்யத்தின்-அதாவது தெய்வத்தின் அம்சமாகவிருக்கலாம். வெளித்தோற்றம் எவ்வாறாயினும், இந்த நூலை ஊன்றிப் படிப்பதால் விசாலப்புத்தியும் அறிவு முதிர்ச்சியுமே ஏற்படுமென்ற ஆழ்ந்த தீர்மானத்தால்,

இங்கு இதை மொழிபெயர்த்தேன். நூதனமாகவும் ஆர்யமத நோக்கத்திற்கு முரண்பாடாகவும் உள்ளதென்று, இந்த நூலையாவது வேறெந்த இலக்கியத்தையாவது புறக்கணித்தல் மதியீனம். நடுநிலையின் பரிசோதனைக்குத் தகுதியற்றது ஒன்றுமில்லை.

'இதன் நூதன நோக்கம் யாது?' என்று கேட்பவர் இருக்கலாம். எனக்குத் தோன்றியவரை இங்கு விடைகூற முயல்வேன். நமது நாட்டினருள், தொன்றுதொட்டு மனிதவாழ்வின் குறிப்பைப்பற்றிய சில "உண்மைகள்" வழங்கிவருகின்றன. ஒரு காலத்தில் அநுபவ ரீதியில் சிலருக்கு இவை நிச்சயமாய்த் தோன்றி யிருக்கவேண்டும். புராதன வழக்கத்தின் வலிமைக்கு அடிமைகளான நாமும் இவை உண்மையென்றே நம்பி வருகிறோம். ஒருவேளை அவை பொய்யாகவும் இருக்கக் கூடுமென்ற எண்ணத்தையும் பாரதநாகரிகச் சிறப்பிற்குத் துரோகமென்று தள்ளிவிடுகின்றோம். நம் சுய அநுபவத்தால் பரிசோதனை செய்வதுமில்லை. 'வேதம் பொய்க்காது' என்று நினைத்துவிடுகிறோம். 'உபநிஷதம் கீதை முதலிய மஹா கிரந்தங்களைச் செய்த ரிஷிகளைக் காட்டிலும் நீ புத்திசாலியோ?" என்று கேட்பவரைப் பலர் அறிவார்கள். "ஐயோ, உயிரோடிருப்பவர் நாமே அல்லரோ! நமது அபிப்பிராயந்தானே முக்கியம்" என்று விடை பகர்ந்தால், அதற்கவர் "இறந்திலர் அகதியர், இப்போதும் இமயமலைச்சாரலில் வனவாஸம் செய்கிறார்," என்பார்போலும்!

எல்லா உண்மைகளுக்கும் ஆதாரமானதும் முதன்மையாவதும் எது? ஜீவனுக்கு ஸம்பவிக்கும் ஸகல துக்கங்களுக்கும் ஆசையே மூலஹேது வென்றும் துக்கத்தைக் கடக்கவேண்டுமென்றால் ஆசையை வென்றுஒழிக்கவேண்டும் என்றும் போதிக்கும் தத்துவமே. ஆசையாவது மனதிற்கும் தோற்றத்திற்கும் ஏற்படும் உறவு. மனதைக் கட்டுதல், ஆசையை வெல்லுதல், என்னும் இவை யிரண்டும் ஒன்று, ஞானியின் அறிகுறி. "புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரம்." இந்திரிய சக்திகளை விவேகத்தால் அடக்கி யாள்பவன் ஆர்யன்.

புத்தரும் அழகிய சித்திரங்களமைந்த தம் வஸந்த மாளிகையில் வைகிக் காதல்நலத்தையும் கற்பனையிலடங்கிய ஸகலபோகங்களையும் இனிது நுகர்ந்தபின், இவற்றின் பிணைக்கும் வலியையும் நிலையாமையும் அறிந்து தம்மைச்சுற்றியசிறப்பை நோக்கி "நான் ஒரு ஈமப் புறங்காட்டில் இருக்கின்றேன்" என்று நிச்சயித்தார். எனினும் ஆசையினாலன்றோ அண்டகோளங்கள் எல்லாம் சுழல்கின்றன, இன்ப நுகர்ச்சியும் ஏற்படுகின்றது, இயற்கையின் பெருங்காரியங்கள் நடைபெறுகின்றன? திங்களின் மனங்கவர் வனப்பும், பரிதியின் ஒளியும், தென்றலின், உயிர்தரு தண்மையும், தாயின்முலை தீம்பால் சுரப்பதும் ஆசைபற்றியே யல்லவா? இந்த ஆசையாகிய அன்பை அடக்குவதே மஹிமையென்பது அன்பழிந்தவனது மடமைச்சொல். அன்பு ஒன்றே நித்யவஸ்து; அதையடக்க இயலவும் இயலாது.

இயற்கையில் நன்மைதீமைகளில்லை, வலிமைதான் மேலீடான குணம். இயற்கையினின்று வேறுபட்டுத் தனிநிலை எய்திப் பாழடைந்த மனிதனுக்குத் தான் நன்மையுந் தீமையும் உளவென்றுரைக்கலாம். தன் குணத்தினால் தொடரும் சக்தியை, நன்மையாகவும் தீமையாகவும் செலுத்திக்கொள்ள மனிதனுக்குச் சுதந்திரமுண்டு. தீமையாவது அநித்யமாயினும், நித்ய அறிவிற்கு இன்றியமையாதது. தீயன புரிதலும் எண்ணுதலும் மறக்கப்படவில்லை. மற்று, கூடுமென்பது இங்குப்பொருளன்று. நன்மையுந் தீமையும் இன்பமுந் துன்பமும் இனியதும் இன்னாதுமாய்ப் பிரபஞ்ச வடிவாக நிற்பது ஆசையாகிய தெய்வம். ஆசையற்றிருப்பவன் ஞானியென்பது மருட்சியால் ஏற்படும் பொய்க்கொள்கை. உண்மையில் அவன் சித்தத்தில் இச்சையென்ற அனல் எப்போதும் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். அநுபவ விவேகியாதலால் ரஸமில்லாத அசுசியான பொருள்களையும் தொழில்களையும் மாத்திரம் அவன் விரும்புவதில்லை.—(இவைதாம் தீமையென்ற விலக்கைச் சார்ந்தன). எனின், ஆசையை அறவேஒழிக்க முயல்வோன் வீணில் உயிர்வலிகுன்றி நாசமடைவான் என்பது இதனால் விளங்கும். மனம்போனபோக்கெல்லாம் ஆகாயக்கோட்டைகட்டித் தன்னலத்தை நாடுபவனும் வினைப்பயனாகிய துன்பத்தை அடைவான். தன்னலக் குறிப்பொன்று மின்றியே, நித்திய வஸ்துவின்பால் ஆழ்ந்த வலிய ஆசைகளே அடக்கற்கரியதாய் மனதில் உதிக்கவேண்டும். அப்பொழுதே வீடு வயல் குடும்பரக்ஷணை பிறர்மதிப்பு என்ற சிற்றாசைகளெல்லாம், வெள்ளப்பிரவாகத்தினால் கால்வாய்கள் அழிவதுபோல, அப்பேராசையில் மூழ்கி மறையும். அவைகளின் பலத்தால் இவ்வுலகம் பொன்மயமாக மாறவேண்டும். இதுதான் அமரத்தன்மை. இதை அறிந்தே நமது நூலாசிரியர் வில்லியம் ப்ளேக் பின்வருமாறு கூறுகிறார்:—

"ஆசையை அடக்கியாள்பவன் எவ்வாறு ஆள்கிறான் எனில்—தன் ஆசை அடக்கியாளத் தகுந்தபடி வலிமை குன்றியிருப்பதால், இந்தநிலை நீடிக்க, ஆசையின் க்ஷீணதசை அதிகரித்து, அந்த ஆட்சியும் வழக்கமாய்மாறிவிடுகிறது" (மேம்பாடு ஒன்றுமில்லை யென்றவாறு)

இதுபோன்ற சில நூதனக் கொள்கைகளை இந்த நூலில் காணலாம். இவை நமது போதனைக்கு மாறாக இருப்பினும் கருத்திற்கொண்டு ஆராய்தற்குரியன வென்பதில் ஐயமில்லை.

***

குறிப்பு:—இந்த நூலின் இரண்டு சிறு பகுதிகளே இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் மற்றவை மறைபொருள் பொதிந்திருத்தலின் மொழிபெயர்க்க இயலாதன. [ ] இவ்விதக் குறிப்பிலடங்கியது பொருள் விளக்கமாய் நான் எழுதியது; மூலமில்லை. புணர் இயல் என்ற சொல் இலக்கண வழக்கைத்தழுவிப் புணரும் நிலையைக் குறிக்கின்றது. சுவர்க்கமென்பது இயற்கை வன்மையை அழிவுபடும் தத்துவம். அதாவது, மனதில் இச்சையாகிய தெய்வகுணம் பகுத்தறிவின் மருட்சியால் க்ஷீணமாகி மரணமடைதல். நரகமென்பது காமமென்ற தெய்வசக்தியின் மேலீட்டைக்குறிப்பது. இவ்விரண்டு முரண்பாடுகளும் ஒருங்கமைந்தவோர் நிலைக்குப் "புணர் இயல்" என்றவாறு. ஆங்கிலச் சொற்றொடரை உள்ளபடி மொழிபெயர்க்க விரும்புவார் "சுவர்க்க நரகவிவாஹம்" (The marriage of Heaven and Hell) எனக்கொள்ளலாம்:—

நூல்

எல்லா வேதங்களுக்கும் மதாசாரியர்களுக்கும் பொதுவான பொய்க் கொள்கைகள் மூன்றுள. அவையாவை யெனின்—

1. "மனிதனுக்கு "ஆத்மா" என்றும், "சரீரம்" என்றும் இரண்டு வேறுபட்ட தன்மைகள் உண்டு.

சரீரம் அழிவது, மரணமடைவது. ஆத்மாவோ அழிவதில்லை.

2. இச்சை யென்ற தீக்குணம் சரீரத்தன்மையால் பிறப்பது. 'பகுத்தறிவு' அல்லது 'விவேகம்' என்ற நன்மை ஆத்மாவில் பிறப்புடையது.

3. இச்சைக் குள்ளாவதால் மனிதன் துன்பமடைகிறான்.

இவற்றின் நேரெதிரான கொள்கைகளே உண்மையெனல் வேண்டும்—அவையாவன:—

1. ஆத்மாவினின்றும் வேறுபட்ட 'சரீரம்' ஒன்றுமில்லை. சரீரமென்பது ஆத்மாவின் அம்சம். ஐம்புலன்களால் அறியப்படுவது. இவை ஆத்மாவின் ஞானக் கருவிகள்.

2. காமம் அல்லது இச்சை யென்பதே உயிர்த் தன்மை. பகுத்தறிவெனப்படுது காமத்தின் வளைவெல்லை.

[வளைவெல்லை யாவது - இவ்வளவு தூரம் இவ்விவ் வகையில் ஆசைப்படலாம் என்று வரையறுத்து, அதனைக்கடக்காமல் தடுப்பது]

3. காமத்தினால் விளைவது பேரின்பம்.

ஒரு கற்பனை—நான் நரகத்திற்குப் போயிருந்தேன். அங்குள்ளவர்தம் களிப்பையும் ஆரவாரத்தையுமே, பாவிகள் அநுபவிக்கும் வேதனை யென்று தேவலோகத்தில் தப்பாய் எண்ணுகிறார்கள். அந்நரகவாசிகளுள் வழங்கும் பழமொழிகள் சிலவற்றை இங்குத் திரட்டியுள்ளேன். ஒரு தேசத்தாரது ஞானநிலை அவரிடை வழங்கும் பழமொழிகளால் நன்கு அறியப்படுவதன்றோ!

நரகப் பழமொழிகள்:—

1. "'அமிதம்' என்ற வழி ஞானமாளிகைக்குச் செல்கின்றது."

[ஆசைப்பெருக்கிலும் வலிமையிலுமே ஞானம்உளதென்றார். மிதவாதியர்க்கு இது நன்மருந்துபோலும்!]

2. "செய்கையில் காமுற்றும் செயலைத் தவிர்ப்பவன் விஷம் விளைவிக்கின்றான்."

[செய்கை பிரதானமில்லை. செயலைக் கவனிப்பவன் மூடன். எண்ணத்தில்ஒளிவேண்டும்; இருளைப் போக்க வேண்டும்.]

3. "ஞானிகள் பார்க்கும் மரத்தை மூடன் பார்ப்பதில்லை'

[மரம் ஒன்றே. மனத்தால் அறியப்படும் பொருள் அறிவின் பேதத்தால் வேறு படுகின்றது. தோற்றமெல்லாம் மானஸீக ரூபங்களென்றே இவர் நம்புவதால், இவ்வாறு கூறினர்.]

4. "தன் முகத்தில் ஒளியில்லாதவன் நக்ஷத்திர தேவன் ஆவதில்லை."

[நக்ஷத்திர தேவன் - பிறன் வழியில் பிரகாசிக்கும் ஞானத்தை உடையவன்.]

5. "தன் சிறகினால் பறந்தால் வானத்தையும் எட்டிப் பறக்கலாம்."

6. "தற்காலம் நிரூபிக்கப்படுவது ஒருகாலத்தில் கற்பனையா யிருந்தது."

7. "நினைக்கக் கூடிய தெல்லாம் ஸத்ய விக்ரஹமெனக் கொளல்வேண்டும்."

[தோற்றமே, சித்தமென்ற வஸ்துவினதாகையால் கற்பனாசக்தியால் தோற்றமும் மாறுபடக்கூடும். லௌகிக அநுபவத்தில் ஏன் அவ்வாறு மாறுவதில்லை யெனில், பொய்ச்சாஸ்திரங்களால் அந்தச் சக்தி லோகத்தில் பலங்குன்றி யிருப்பதே காரணமாதல்வேண்டும். இவ்விரண்டு வாக்கியங்களும் இதை எடுத்துக்காட்டுகின்றன.]

8. "நரி தன் இரையைத் தேடவேண்டும். சிங்கத்திற்குப் பகவான் உணவளிக்கிறான்."

[பகவானைத் தீனபந்து வென்றும் அநாதரக்ஷகன் என்றும் பிரார்த்தனைசெய்து துதிப்பவர் இச்சொல்லைக் குறிப்பாராக!]

9. "தகாதவை அறிந்தாலன்றித் தகுதியை அறிய முடியாது."

10. "மிக அழகிய இலையைத்தேடிப் புழு முட்டையிடுவதுபோல் சுவைசெறிந்த இன்பங்களையே மதாசாரியன் விலக்குகின்றான்"

11. "வலிமை எழில்."

12. "இயற்கையின் யுகாந்தரத் தொழிலின் விளைவாக ஒரு பூ மலர்கின்றது."

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் : ச்யாவனப்ராச, ஜீவஸுதா, பாதாமி லேகியம், தந்வந்தரி லேகியம்

"சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ... பண்டிட் ஸோல் ஏஜண்ட் சுன்ஸான், மதுரை

தைலங்கள் : அமிர்தாமலக, பிருங்காமலக, ஸுகுமார, ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஏ. மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

கலாநிலயச் சொல்லூடாட்டம் 7.



இடம்—வலம்

1. மக்கட் டொகுதி.
4. துரியோதனன் மனைவி.
7. செவிலி.
9. குதிரைச் சம்மட்டி.
10. சுண்ணும்பு.
12. அப்பர் தமக்கை.
14. தன்வயமாக்குதல்.
17. நெய்தல்நில மக்கள்
18. ஓர் இராகம்.
20. விரைவு.
21. குரங்கு.
22. அலை.
23. கள்.
24. பல்.
25. திருமாலின் வாள்.
27. மேடு.
28. குயில்.

மேல்—கீழ்

1. மேகம்.
2. விரோதம்.
3. அசுரர்.
4. தாவக்கடவாய்.
5. நாரதன் வீணை.
6. திக்கு.
8. கூந்தற் பனை.
11. தடவுதல்.
13. காடு.
15. கறையான்.
16. பருப்பு.
17. ஓர் இலக்கணநூல் ஆசிரியர்.
18. இரத்தினம்.
19. குறுந்தறி.
21. ஒடிதல்.
23. முதுகு.
24. மேன்மகன்.
25. தொங்கு.
26. குற்றம்.

கடைசிநாள் :—1932 வருடம், செப்டம்பர் மாதம், 26 தேதி.

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவர்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை, மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 5. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம் - வலம்:—1. பரிதி; 3. நந்தகோபன்; 7. திமில்; 9. சலதி; 10. குகை; 12. துலங்கல்; 14. வாமனன்; 16. விட; 17. விரகம்; 18. கடம்பன்; 19. சாம்ப, தேம்ப; 20. கலன்; 21. திமிரம்; 26. கும்பகருணன்; 28. நரபதி; 30. கலம்; 31. கணிகை; 32. கம், அம்; 33. புழை, புரை.

மேல் - கீழ்:—1. பங்கு; 2. திதி; 3. நல்லன்; 4. தசகண்டன்; 5. கோலல்; 6. பதி; 8. மிதுனம்; 11. கைவாரம்; 13. மூடன், மடன்; 15. மகபதி; 16. விபவ; 17. விசாலை, விதேகை; 18. கலம்பகம்; 20. காம்; 22. மிகுதி; 23. சுரும்பு; 24. புன்னை, தென்னை, வன்னி, கொன்றை, தான்றி; 25. தரணி; 27. கல; 28. நக; 29. பகை.

நேரிய விடை அனுப்பியவர்:—S. சந்தானகோபால ஐயர், கண்டாச்சிபுரம். A. P. L. சொக்கலிங்கம், மேலைச்சிவபுரி. V. S. கோவிந்த கிருஷ்ணன், கோம்பை. R. திருமலை ஐக்கையா (இரண்டு விடைகள்), கோம்பை. K. A. S. பத்மநாபன், திருப்பத்தூர். V. சரவணமுத்து, மன்னூர். K. அல்லா பிச்சை, கோம்பை. T. S. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீவைகுண்டம். K. வேலுப்பிள்ளை, பேராதனை. S. கந்தையா, பேராதனை. சி. கந்தையா, மன்னூர். K. கங்கேச ஆசிரியர், வேளானை. V. மீனுக்ஷிசுந்தரம் ஐயர், பேரையூர். A. சுருளியாண்டி, கோம்பை. C. திருஞானசம்பந்தம், உக்கிரன் கோட்டை. O. E. ஸையத் இஸ்மேயில், மாந்தலை. K. சபாநாதன், கொழும்பு. S. N. இராமசாமி ஐயங்கார், சங்கரிதுர்க். R. சின்னசாமி, சிந்தலைச் சேரி. S. M. சொக்கலிங்கம், கொழும்பு. V. R. இராமானுஜ முதலியார், வாரம்பியம். முத்து. K. M. M. N. சுப்பைய செட்டியார், தேவகோட்டை. முத்து K. M. M. அருணசலம் செட்டியார், தேவகோட்டை. K. இராஜகோபால், தேவாரம். K. N. கதிரேசன் செட்டியார், தேவகோட்டை. G. P. இராமசந்திரன், சென்னை.

பரிசுபெற்றவர்:—S. N. இராமசுவாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.
விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல எட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு **0-6-0**

கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினைல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிலாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, சிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

பலசாலிகள் மஹாநாடு:—செட்டிநாட்டில் ஆகஸ்டு மாதம் 13, 14 தேதிகளில் தமிழ்நாட்டுப் பலசாலி மஹாநாடு நடந்தது. பங்களூர் பலசாலியான ஸ்ரீமான் K. V. ஐயரவர்கள் தலைமை வகித்து மஹாநாட்டைச் செவ்வனே நடத்தி வைத்தார். 3000-க்கு அதிகமானவர்கள் மஹாநாட்டிற்கு வந்திருந்தனர். செட்டிநாட்டுச் சாண்டோ ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியாரும், வரவேற்புக் கழகத்தலைவரான ஸ்ரீமான் S. Rm. C. T. ஜம்புலிங்கம் செட்டியாரவர்களும் மஹாநாட்டு ஏற்பாடுகளில் குறையொன்றும் சொல்வதற்கில்லாதபடியான வசதிகள் அமைத்திருந்னர். மாதர்களும் மஹாநாட்டிற்கு வந்திருந்தனர்.

13 தேதியன்று காலை, சென்னை வக்கீல் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் மஹாநாட்டைத் திறந்துவைக்க மஹாநாடு ஆரம்பமாயது. ஐயரவர்கள் மஹாநாட்டைத் திறந்துவைக்கையில், 250 பவுண்டு கனத்தைத் தூக்குவதைக் காட்டிலும் அடிக்கின்ற கைக்கு மறு கன்னத்தைக் காட்டுவதே கஷ்டமென்றும், முன்னதற்கு உடற்பயிற்சி வேண்டுவதுபோல் பின்னதற்கு மனப் பயிற்சி தருவன கலைகளென்றும் கூறினர்.

வரவேற்புக் கழகத்தலைவர் ஸ்ரீமான் ஜம்புலிங்கம் செட்டியார், பொருள் செறிந்த சில உரைகளால் நல்வரவு கூறிய பின்னர், மஹாநாட்டுத் தலைவர் தமது பிரசங்கத்தைச் செய்தார். இந்தியாவின் சுகாதார நிலையின் சீர்கேடும், இளமையில் முதுமையும் பிறவாமுன் மரணமும் மற்ற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் அதிகம் என்றும், இன்னவற்றிற்குக் காரணம் உடல்வலியின்மையென்றும், எனவே இந்திய மக்கள் உடற் பயிற்சியில் ஈடுபடுவதோடு, நாடெங்கும் உடற்பயிற்சி நிலயங்களை நிறுவவேண்டுமென்றும் வற்புறுத்தினர். பிறகு பலசாலிகளின் போட்டி நடந்தது.

இரண்டாம் நாளும் பல போட்டிகள் நடந்தன. ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் போட்டிகளில் அதிக வெற்றி பெற்றவருக்குச் சாம்பியன்ஷிப் பரிசிற்கென ஒரு பெரிய வெள்ளிக்கோப்பை அளித்தார்கள்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்க்குக் கலெக்டர் ஸ்ரீமான் சுந்தரமையர் I. C. S. பரிசளித்தார். மஹாநாட்டுத் தலைவர் மஹாநாட்டில் தமது உடற்பயிற்சியின் பயனாய உடற்கட்டையும் தசைகளின் வலிமையையும் காட்டினர். தலைவர் முடிவுரையுடன் மஹாநாடு இனிது நிறைவெய்தியது.

***

வக்கீல் தொழில்:—இமயமலையில் ரிஷிகேச மென்னுமிடத்தில் சுவர்க்காச்ரமத்தில் தவம்புரியும் சுவாமி சிவாநந்தர் என்னும் பெரியார், வக்கீல் தொழிலைக் கடிந்து கூறுவதாவது:—"வக்கீலை உண்மையில் கழுகென்று சொல்லவேண்டும். ஜமீன்தாரானோர் புல்லுருவியாவார். வட்டிக் கடைக்காரனை அட்டையென்று சொல்ல வேண்டும். கடவுள் இப்பாபிகள்மீது கருணை புரிவாராக. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. செல்வத்தினாலும் புத்தியினாலும் அவர்கள் மயக்கமடைந்திருக்கின்றார்கள். நண்பா! நீ ஒரு நாளும் வக்கீல்தொழிலை மேற்கொள்ள வேண்டா. போலீஸ் உத்தியோகத்திலும் சேராதே. விமோசனம் வேண்டுமெனில் உபாத்தியாயத் தொழிலையாவது, வைத்தியத் தொழிலையாவது மேற்கொள்"

***

அமெரிக்கச் செல்வரின் பெருந்தன்மை:—அமெரிக்க ஐக்கியநாட்டில் அயோவா மாகாணத்தில் ஸ்லோன் என்னும் ஊரில் ஹன்னம் என்பவர் ஒரு பெரிய வியாபாரியாவார். அவரிடம் வியாபார சம்பந்தமுள்ள பலர், அவருக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளைப் பணக் கஷ்டத்தால் கொடுக்க இயலாதவர்கள் ஆகவே, அவர்களை நெருக்கிப் பணத்தை வசூல் செய்ய மனமிலாத அம்முதலாளி தமக்குச்சேரவேண்டிய தொகைகளைக் கொடுக்கவேண்டிய தில்லையென்று எழுதிவிட்டார். இச்செயலை எல்லோரும் போற்றுகின்றனர் என்று அமெரிக்கச் செய்தி கூறுகின்றது.

***

அரசாங்க அறிக்கை:—சென்னை இராஜதானியில் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் மலையாள வாசிகளே அதிகம் சேர்ந்தனர் என்றும், அவர்களுள் படித்த வகுப்பினர் பலர் வேலையில்லாத் திண்டாட்ட நிலையுற்றதால் சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்தனரென்றும் சென்னையரசாங்க அறிக்கை கூறுகின்றது.

***

சுதேசியப் பொருட் காட்சி:-அக்டோபர் மாதத்தில், சுதேசியத்தை வளர்க்கும் பொருட்டுச் சுதேசியப்பொருட்காட்சிச் சாலையைத் திறந்துவைக்க ஏற்பாடு நடந்து வருகின்றதென்று திருச்சிச் செய்தி கூறுகின்றது.

***

வருமான முறை:—சென்னை முனிசிபாலிட்டியார் சென்னைக்கு 30 மைலுக்கு அப்பாலிருந்து சென்னை வரும் பிரயாணிகளிடம் முதல்வகுப்பு டிக்கட்டுக்கு 4 அணாவும், இரண்டாம் வகுப்புக்கு 2 அணாவும், மூன்றாம் வகுப்புக்கு 1 அணாவும் வரிவாங்கத் தீர்மானம் செய்திருக்கின்றனர். இரயில்வே அதிகாரிகள் டிக்கட்டுடன் இத்தொகையை வசூலித்துவிடுவார்கள்.

***

ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண் பாடசாலை:—சென்னை வக்கீல் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் செட்டிநாடு சென்றிருக்கையில் தேவகோட்டையிலுள்ள ஸ்ரீ சுவர்ண மூர்த்தி பெண்பாடசாலையார் அழைப்பிற்கிணங்கி ஆகஸ்டுமாதம் 15ந்தேதி அப்பாடசாலையைப் பார்வையிட்டார். அப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் முருகனும், பாடசாலை நிர்வாகியான ஸ்ரீமான் வெ. அழ. அழகப்ப செட்டியாரும், மாணவிகள் குறள் நாலடியார் முதலிய அரிய பெரிய உயிர்க்குறுதியாய இலக்கிய நூல்களில் பயிற்சி பெற்று அருளும் அன்பும் தங்கிய சான்றோராய்த் திகழ வேண்டுமென்று முயலும் நன் முயற்சியைப் பாராட்டி வரைந்து தந்துளவோர் நற்சாட்சியுரையின் பிரதியொன்று வரப்பெற்றோம்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனுேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.

ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸ்ரீமதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)